பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 28

செவ்வாய்க்கிழமை
24 டிசெம்பர் 2024

மார்கழி 09 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

ரணிலின் வழியில் அநுரவும் பயணம்!
» 02

தரமற்ற மருந்துகள் சந்தையில் அகற்றல்
» 03

முன்பிருந்த நிலையை விடவும்

## சாவகச்சேரி மருத்துவமனையில் மருத்துவ நெருக்கடி அதிகரிப்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 24
சாவகச்சேரி மருத்துவமனையில் முன்பு இருந்த நிலையை விடவும் மருத்துவ நெருக்கடி மேலும் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
சாவகச்சேரி மருத்துவமனை பொதுமருத்துவ நிபுணர்கள் இல்லாமல் தற்காலிக மருத்துவர்களுடன் இயங்கி வருகின்றது என்றும், இதனால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என 15

## மதுக்கடைகளுக்கு எதிராகப் போராட்டம்

கிளிநொச்சி, டிசெ. 24
கிளிநொச்சியில் அதிகரித்துவரும் மதுபானக்கடைகளுக்கு எதிராக இன்று காலை 9 மணியளவில் போராட்டம் இடம்பெறவுள்ளது. 09

# எலிக்காய்ச்சல் கட்டுப்பாட்டில்!



யாழ்ப்பாணம், டிசெம்பர் 24
யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாகத் தீவிரமாகப் பரவிவந்த எலிக் காய்ச்சல் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 15



## மஹிந்த ராஜபக்சவுக்கு ஐ.எஸ். அச்சுறுத்தலாம்

பாதுகாப்புக் குறைக்கப்பட்டதால் பெரமுன சரமாரிக் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 24
மஹிந்த ராஜபக்சவை இலக்கு வைத்து ட்ரோன் தாக்குதல் அச்சுறுத்தல் உள்ளது. அத்துடன் அவருக்கு ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பாலும் அச்சுறுத்தல் உள்ளது என்று ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன குற்றஞ்சாட்டியுள்ளது. மஹிந்த ராஜபக்ச உள்ளிட்ட முன்னாள் 15

## யுவதி சாவு

யாழ்., டிசெ. 24
தவறான முடிவு எடுத்து யுவதியொருவர் உயிரிழந்துள்ளார். 09

முன்னாள் ஜனாதிபதிகளின்

## பாதுகாப்புக் குறைப்பால் நாட்டுக்கு நன்மையில்லை

கொழும்பு, டிசெ. 24
முன்னாள் ஜனாதிபதிகளுக்குரிய இராணுவ பாதுகாப்பை நீக்குவதால், நாட்டின் பொருளாதாரத்துக்கு எந்த நன்மையும் ஏற்படாது என்று பிரதான எதிர்க்கட்சியான 15

எல்லாமும் டிஜிற்றல்!
» 05

## இலங்கையிடமிருந்து கச்சதீவை மீட்போம்

தி.மு.க. தீர்மானம்

சென்னை, டிசெ. 24
மீனவர்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக, இலங்கைக்கு தாரைவார்க்கப்பட்ட கச்சதீவை மீட்க வேண்டும் என்று தி.மு.க. நேற்றுமுன்தினம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. தமிழகத்தின் ஆளும் கட்சியான தி.மு.க. 15

## நெஞ்சுவலி ஏற்பட்டு சிப்பாயொருவர் பலி

யாழ்ப்பாணம், டிசெ. 24
பலாலி இராணுவ முகாமில் கடமையாற்றிவந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் திடீர் நெஞ்சுவலி காரணமாக, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் நேற்றுமாலை உயிரிழந் 15

## மோ.சைக்கிளில் சென்றவர் மயங்கி வீழ்ந்து உயிரிழப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 24
மோட்டார்சைக்கிளில் சென்றுகொண்டிருந்தவர் திடீரென மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் அச்சுவேலியில் நேற்று இடம்பெற்றுள்ளது.
தேவதாசன் உதயசேனா (வயது-64) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்தவராவார். சந்தைக்கு 15

மின்கட்டண நிவாரணம்

## 1,050 சிறுவணிகர்கள் பரிசீலனையில்

யாழ்ப்பாணம், டிசெ. 24
மின்கட்டண நிவாரணம் வழங்குவதற்காக யாழ்ப்பாணத்தில் ஆயிரத்து 50 சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் பெயர்கள் பரிசீலனை செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 09

## மின்கட்டணத்தைக் குறைக்க அரசாங்கமே முழுத் தடை!



நளின் பண்டார குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 24
மின் கட்டணத்தைக் குறைக்க வேண்டாம் என்று அரசாங்கமே மின்சாரசபைக்கு அறிவுறுத்தியுள்ளது என்று எமக்குத் தகவல் கிடைத்துள்ளது என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.
இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார மேலும் தெரிவித்ததாவது:-
பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் நடவடிக்கைகளுக்கு எதிராக 15

முச்சந்தி முரளி



‘எக்ஸாமா? எலக்சனா? சபாஷ்! சரியான போட்டிதான் பாருங்கோ’

## உள்ளூராட்சித் தேர்தல்: மே மாதத்தில் நடத்துக!

கொழும்பு, டிசெ. 24
சாதாரணதரப் பரீட்சையைக் கருத்திற்கொண்டு உள்ளூராட்சித் தேர்தல் திகதியை நிர்ணயிக்க வேண்டும். இதன்படி மே மாதத்தில்தான் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று பிவிதுரு ஹெல உறுமய கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.
பிவிதுரு ஹெல 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணில் அரசாங்கத்தின் வழியில் அழைத்துச்செல்லப்படும் அநுர!



## குற்றஞ்சாட்டுகின்றார் முஜிபுர்

**கொழும்பு, டிசெ.24**
**அநுரகுமார திஸாநாயக்கவை இலங்கை மத்தியவங்கியின் ஆளுநரும், திறைசேரியின் செயலாளரும், ரணில் அரசாங்கத்தின் பாதையில் அழைத்துச் செல்கின்றனர் என்று தெரிவித்துள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான்.**

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
நாணய நிதியத்தின் உடன்பாட்டில் இருந்து விலகுவோம் என்று கூறியவர்கள் இன்று ஓர் எழுத்தைக்கூட மாற்ற முடியாத நிலையில் உள்ளனர். இந்தியாவின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு கடும் எதிர்ப்பு வெளியிட்ட இவர்கள், இந்தியப் பயணத்தின்போது வெளியிட்ட கூட்டறிக்கையில் சம்பூர் திட்டத்துக்கு முழுமையாக இணங்கியுள்ளனர்.
ஜனாதிபதிக் கதிரையில் அமர்ந்தபின்னர் அநுரகுமார திஸாநாயக்க மறந்துபோன வாக்குறுதிகளை நினைவுபடுத்தும் வேலைத்திட்டத்தையே நாம் இப்போது முன்னெடுக்கின்றோம் - என்றார். (எ-இ)


# ஒற்றுமையை மேம்படுத்த கப்பல் பயணம்

கொழும்பு, டிசெ.24
இலங்கை - இந்திய கரையோர காவல் படைக் கப்பல்கள் பரஸ்பர ஒற்றுமையை மேம்படுத்துவதற்காகப் பயணம் மேற்கொள்ளவுள்ளன.
இதன் அங்கமாக இந்தியாவின் 'வைபவ்' கப்பல் கொழும்புத் துறைமுகத்துக்கு வந்துள்ளது. மற்றொரு கப்பலான 'அபிராஜ்' இம்மாதம் 29 ஆம் திகதி முதல் ஜனவரி மாதம் வரை காலித் துறைமுகத்தில் தரித்து நிற்கும்.
தீயணைப்பு, கடல் மாசடைதல், கடற்கரை சுத்தம், பிளாஸ்ரிக் அச்சுறுத்தல் போன்ற பயிற்சிகளில் இரு பகுதியினரும் ஈடுபடவுள்ளனர். யோகாசன நிகழ்வும் கப்பலில் இடம்பெறவுள்ளது. அதேபோன்று இலங்கை கரையோர காவல் படைக்கப்பல் எதிர்வரும் 27 ஆம் திகதி இந்தியாவுக்குச் செல்லவுள்ளது. (எ-25,6)

# பொருளாதாரக் கொலையாளிகளை நீக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் அநுர!

*மின்சார பாவனையாளர் சங்கம் கோரிக்கை*

கொழும்பு, டிசெ.24
இலங்கை மின்சாரசபையில் உள்ள பொருளாதாரக் கொலையாளிகளை நீக்குவதற்கு ஜனாதிபதி உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மின்சார பாவனையாளர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. கொழும்பில் நடந்த ஊடக சந்திப்பில் அந்தச் சங்கத்தின் செயலாளர் சஞ்ஜீவ தம்மிக்க இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.
இதுதொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-
அதிக இலாபத்தை ஈட்டியுள்ள மின்சாரசபையால் சுமார் 40 வீதமாக சலுகைகளை பாவனையாளர்களுக்கு வழங்கமுடியும். ஆனால் அவ்வாறு நடக்கவில்லை.




தற்போது இலங்கை மின்சாரசபையின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் நிலக்கரி மோசடியுடன் தொடர்புடையவர். இவ்வாறான பொருளாதாரக் கொலையாளிகளைக் கண்டறிந்து ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (எ-இ)

# தனிவழி செல்லும் பெரமுன

கொழும்பு, டிசெ.24
உள்ளூராட்சித் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவது தொடர்பில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அவதானம் செலுத்தியுள்ளது.
பொதுஜன பெரமுனவின் அரசியல் சபை மற்றும் நிறைவேற்றுக்குழு அண்மையில் கூடி இது தொடர்பாக விரிவாக ஆராய்ந்துள்ளது. உள்ளூராட்சித் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதே பொருத்தமானது என்று கட்சியைச் சேர்ந்த பலரும் கருத்து வெளியிட்டுள்ளனர். ஆயினும், பொதுஜன பெரமுனவின் பங்காளிக்கட்சியான இலங்கை சமசமாஜக் கட்சியுடன் மட்டும் உடன்பாட்டை ஏற்படுத்துவது தொடர்பாகயும் ஆராயப்பட்டுள்ளது. (எ-இ)

# அநுரவுடன் கலந்துரையாடிய மாவட்ட, பிரதேச செயலாளர்கள்

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் மாவட்டச் செயலர்கள், பிரதேச செயலர்களிடையே கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றுள்ளது. அதில் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அரசியல் அழுத்தங்கள் இல்லாத பொதுச்சேவைக்கட்டமைப்பு உருவாக்கப்படவேண்டுமென தெரிவித்துள்ளார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
தற்போதுள்ள பொதுச்சேவைக்கட்டமைப்பு வினைத்திறனற்றதாக காணப்படுகிறது. அதை மக்கள் நலன் சார்ந்த, பக்கச்சார்பற்ற, பொறுப்புக்கூறத்தக்கதாக, பொது மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தத்தக்கதாக மாற்றியமைக்கவேண்டும். இந்தத் திட்டத்தின் கீழ் ஆயிரத்து 500 உத்தியோகத்தர்கள் இந்தியாவுக்குப் பயிற்சிக்காக அனுப்பப்படவுள்ளனர். இந்தத் திட்டத்திற்கு ஒத்துழைக்காத அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார். (எ-22,6)

# அநுரவின் அரசாங்கத்துக்கு ரணில் சவாலாக மாறலாம்

## உதய கம்மன்பில தெரிவிப்பு



கொழும்பு, டிசெ.24
முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போதைய அரசாங்கத்துக்குச் சவால் விடும் நபராகச் செயற்படலாம் என்று தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் உதய கம்மன்பில.
இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது
முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்னமும் அரசியலில் இருந்து ஓய்வுபெறவில்லை. இந்த அரசாங்கத்துக்குச் சவால் விடும் நபராக அவர் செயற்படலாம்.
ஏனெனில் அவரது பொருளாதாரக் கொள்கைகளையே தற்போதைய ஜனாதிபதி செயற்படுத்துகின்றார்.
2022ஆம் ஆண்டு நாடு வங்குரோத்து நிலையை அடைந்தபோது ரணில் விக்கிரமசிங்க தனிநபராகவே அரசாங்கத்தைப் பொறுப்பெடுத்தார். அதன் பின்னர் குறுகிய காலத்தில் நாடு வங்குரோத்து நிலையில் இருந்து மீண்டது - என்றார். (எ-இ)

# திலித்துடன் இணைந்த சந்திரசேன

கொழும்பு, டிசெ.24
முன்னாள் அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன நேற்று சர்வஜன அதிகாரம் கட்சியின் உறுப்பினராக இணைந்து கொண்டார். கட்சியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீரவிடம் இருந்து அவர் கட்சி உறுப்புரிமையைப் பெற்றுக் கொண்டார். அந்தக் கட்சியின் தலைமைக் குழுவுக்கும் முன்னாள் அமைச்சர் நியமிக்கப்பட்டுள்ளார். எஸ்.எம்.சந்திரசேன ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கத்தில் பல அமைச்சுப் பதவிகளை வகித்தவராவார். (எ-இ)




# கைவினைப் பேரவைக்கு புதிய தலைவர் நியமனம்

தேசிய கைவினைப் பேரவையின் தலைவராக வடிவமைப்பு மற்றும் தயாரிப்பு மேம்பாட்டில் நிபுணரான கலாநிதி ஆயிஷா விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டுள்ளார். கைத்தொழில் அமைச்சர் சுனில் ஹந்துநெத்தி உத்தியோகபூர்வமாக இந்த நியமனத்தை வழங்கினார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தரமற்ற 13 மருந்து வகைகள் பாவனையிலிருந்து அகற்றம்!



கொழும்பு, டிசெ.24

**இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட 13 வகை மருந்துகள் தரமின்மை காரணமாக பயன்பாட்டில் இருந்து விலக்கிக்கொள்ளப்பட்டுள்ளது என்று மருத்துவர்கள் மற்றும் சிவில் உரிமைகள் சங்கத்தின் தலைவர் மருத்துவர் சமல் சஞ்சீவ தெரிவித்தார்.**

கடந்தவாரம் 8 மருந்துகளும், இந்தவாரம் 5 மருந்துகளும் பாவனையில் இருந்து அகற்றப்பட்டுள்ளன. நீக்கப்பட்ட 8 மருந்துகள் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் 300 வகையான மருந்துகள் பாவனையில் இருந்து விலக்கப்பட்டுள்ளன என்றும், அவற்றில் பல நிமோனியா, மூளைக்காய்ச்சல் போன்றவற்றுக்குப் பயன்படுத்தப்படுபவை.

ஒவ்வொருவாரமும் தரமற்ற மருந்துகள் அகற்றப்படுகின்றபோதும், இந்த மருந்து இறக்குமதியில் பணியாற்றிய அதிகாரிகள் தொடர்பாக சுகாதார அமைச்சால் முறையான வேலைத்திட்டத்தை உருவாக்க முடியுவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஏ-இ)

## வர்த்தமானி வெளிவராததால் அரிசி இறக்குமதியில் சிக்கல்

கொழும்பு, டிசெ.24

அரிசி இறக்குமதிக்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும்வரை மீண்டும் அரிசி இறக்குமதி செய்வதற்கு வாய்ப்பில்லை என்று இலங்கை சுங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது. தனியார்துறையினர் அரிசி இறக்குமதி செய்வதற்கு வழங்கப்பட்ட கால அவகாசம் கடந்த 20ஆம் திகதி நிறைவடைந்துள்ள நிலையில், எதிர்வரும் 10ஆம் திகதிவரை காலஅவகாசம் நீடிக்கப்பட்டிருந்தது. ஆயினும் அதுதொடர்பாக வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படாததால், அரிசியை இறக்குமதி செய்தாலும் அதைச் சந்தைக்கு விடுவிக்கமுடியாது என்று இலங்கை சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஏ-இ)

## முப்படை பாதுகாப்பு நீக்கம்

கொழும்பு, டிசெ.24

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புக்காக நியமிக்கப் பட்டிருந்த முப்படையினர் நேற்றுமுதல் பாதுகாப்புப் பணிகளில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பான அரசாங்கத்தின் தீர்மானத்தைக் கடந்த செவ்வாய்க்கிழமை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் நாடாளுமன்றத்தில் அறிவித்திருந்தார். அதேவேளை, முன்னாள் ஜனாதிபதிகளுக்கான பொலிஸ் பாதுகாப்பு தொடர்ந்து வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஏ-இ)



## ஜனவரி 2 பாடசாலை ஆரம்பம்

கொழும்பு, டிசெ.24

அரச பாடசாலைகள் மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளில் 2024ஆம் ஆண்டுக்கான மூன்றாம் தவணையின் இரண்டாம் கட்டம் எதிர்வரும் 2ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

அனைத்துப் பாடசாலைகளிலும் மூன்றாம் தவணை ஜனவரி மாதம் 24ஆம் திகதியுடன் நிறைவடையும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (ஏ-இ)




கிளிநொச்சி ஆஸ்பத்திரியில நடந்த சம்பவ வீடியோவொண்டு சமூக வலைத்தளங்களில நேற்றுமுதல் சுத்திக்கொண்டு திரியுது. அதைப் பாக்கவே அந்த ஆஸ்பத்திரியில வருத்தக்காரருக்கு நல்லபடியா ட்ரீட்மெண்ட் செய்வினமோ எண்ட டவுட் தான் எல்லாருக்கும் வரும். கீழ தவறி விழுந்த ஒருத்தர்,பிடரியால ரத்தம் ஊத்திக் கொண்டிருக்க, அந்தக் காயத்தைக் கையால பொத்திக்கொண்டு 'வீல் செயாரில' இருக்கிறார். அவர் போட்டிருக்கிற சேர்ட் முழுக்க ஒரே ரத்தம். ஆனால் அவரை எங்க போற தெண்டு தெரியாமல் அவரோட வந்த பெடியன் முழுசிக் கொண்டிருக்கிறான்.

'நாலாம் வோர்ட்டுக்கு ஆளைக் கொண்டு போங்கோ' எண்டிட்டு அங்க வேலை செய்யிற நேர்ஸ் ஒராள் சொல்லிப் போட்டு தன்ர அலுவலைப் பார்க்கப் போட்டா. அதவிட இன்னும் நாலைஞ்சு நேர்ஸ்மார், அட்டெண்டர்மார் எல்லாரும் 'ஓ.பி.டி' வாசலில குவிஞ்சு போய் நிக்கினம். அவையில ஒருத்தர்கூட 'இப்பிடி ரத்தம் ஓட ஓட அந்த மனிசன் ஏன் அப்பிடியே வீல்செயாரில இருக்கிறார்?' எண்டு ஒருசொல்லுக் கூட கேக்கேலை. அதுக்கிடையில ஒரு நேர்ஸ் சாப்பிட்ட கைகழுவ ஆடி அசைஞ்சு போறா. ரத்தக்காயத்தோட வந்தவருக்கு, ரத்தம் ஓடாமல் இருக்க ஒரு மருந்தாவது கட்டிவிட அங்க உள்ளவைக்கு அறிவுமில்லை, மனமுமில்லை. 'நாலாம் வாார்ட்டுக்கு கொண்டு போங்கோ' எண்டு ஓர்டர் போட மட்டும் தான் அங்க வேலைக்கு ஆக்கள் இருக்கினம் எண்டால், உவையளை நிப்பாட்டிப் போட்டு பேசாமல் 'ரெக்கோர்டிங்' செய்த 'சீடி' ஒண்டைப் போட்டுவிட்டால் அரசாங்கத்துக்கும் செலவு மிச்சம்.

எங்கயெங்க எந்தெந்த வாார்ட் இருக்கு எண்டு எல்லாரும் முதலே தெரிஞ்சு கொண்டு ஆஸ்பத்திரிக்கு வாறேலை. தற்சமயம் அந்தக் காயம்பட்டவர் உதவிக்கு ஆளில்லாமல் வந்திருந்தால் அந்த 'வீல் செயாரை' அவரே தள்ளிக்கொண்டு போகோணுமோ? அவசர வருத்தமெண்டு வாறவையை அந்தந்த வாார்ட்டுகளுக்கும் உரிய நேரத்தில கொண்டு போய்ச் சேர்க்கிறதும் ஆஸ்பத்திரியில வேலை செய்யிறவையின்ர கடமையெல்லோ? இப்பிடி சின்னச் சின்ன வேலையளைக் கூட செய்யேலாதவையாலதான் ஆஸ்பத்திரியளுக்கே கெட்ட பேர். நிர்வாகம் செய்யிறவை இப்பிடியான விசயங்களைக் கவனிக்க மாட்டினமோ?

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத பனை தறிப்பு பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், டிசெ.24

தனங்கிளப்பில் சட்டவிரோதமாகப் பனை மரங்கள் தொடர்ச்சியாகத் தறிக்கப்படுவதை அடுத்து, பனை அபிவிருத்திச் சபை சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் இதுதொடர்பில் முறைப்பாடு செய்துள்ளது.

பனை அபிவிருத்திச்சபைக்குக் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் சம்பவ இடத்துக்குச் சென்று உத்தியோகத்தர்கள் ஆராய்ந்தபோது 25க்கும் மேற்பட்ட பனை மரங்கள் தறிக்கப்பட்டிருந்ததை அவதானித்துள்ளனர்.

பனைகள் தறிக்கப்பட்ட காணியின் உரிமையாளர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்ட நிலையில், வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்று பொலிஸார் உறுதியளித்தனர். பனை மரங்களை வெட்டுவதற்காகக் கொண்டுவரப்பட்ட கனரக இயந்திரங்களை முறைப்பாட்டில் பதிவு செய்யுமாறு எமது உத்தியோகத்தர்கள் வலியுறுத்தியபோதும் பொலிஸார் அதை ஏற்க மறுத்துள்ளனர். அதன்பின்னர் மேலிடத்துக்கு அறிவிக்க நேரிடும் என்று கூறியபின்னரே அவர்கள் முறைப்பாட்டை ஏற்பதாகக் கூறினர். சட்டவிரோதமாக பனைமரங்கள் தறிக்கப்பட்டால் 0779273042 என்ற இலக்கத்துக்கு அறிவிக்க முடியும் என்று பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் தெரிவித்துள்ளார். (எ-33-27)



# சட்டவிரோத மணல் அகழ்வு: கரம்பகம் மக்கள் போராட்டம்

கொடிகாமம், டிசெ. 24

**சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுக்கக்கோரி கொடிகாமம், கரம்பகம் பிரதேச மக்களால் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.**

கரம்பகம் பிரதேசத்தில் தோட்டத்துக்குச் செல்லும் பிரதான வீதிகளில் சட்டவிரோதமாக மணல் அகழப்படுகின்றது என்று குற்றஞ்சாட்டிய மக்கள், இந்த சட்டவிரோத மணல் அகழ்வை உடனடியாகத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினர். சட்டவிரோத மணல் அகழ்வால் தோட்ட வீதிகள் சேதமடைகின்றன. அதனால் விவசாய நடவடிக்கைகள் பாதிப்படையும். உரிய அதிகாரிகள் இதுதொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கோரிக்கை விடுத்தனர். (எ-25,159)

# உடுத்துறை கடற்கரையில் ஒதுங்கிய மர்மப் படகு!



யாழ்ப்பாணம், டிசெ.24

வடமராட்சி கிழக்கு, உடுத்துறை ஐந்தாம் பனையடிக் கடற்கரையில் படகொன்று நேற்றுக் கரையொதுங்கியுள்ளது. OFRP6224JFN என இலக்கமிடப்பட்டுள்ள படகொன்றே கரையொதுங்கியுள்ளது.

சம்பவ இடத்துக்குப் பொலிஸாரும், வடமராட்சி கிழக்குக் கடற்றொழிலாளர் சமாசத் தலைவரும் சென்று படகைப் பார்வையிட்டதுடன், நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகளுக்கும் அதுதொடர்பில் அறிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் மருதங்கேணிப் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (எ-66,20)

## கலந்துரையாடல்

கொடிகாமம், டிசெ.24

கால்நடை வளர்ப்போர், விவசாய உற்பத்தியாளர்கள் மற்றும் சுயதொழில் முயற்சியாளர்களுக்கான கலந்துரையாடல் யாழ்.மாவட்டக் கூட்டுறவுச்சபை மற்றும் வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் ஏற்பாட்டில் யாழ்.தந்தை செல்வா ஞாபகார்த்த மண்டபத்தில் எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெறவுள்ளது

கால்நடை வளர்ப்போர், விவசாய உற்பத்தியாளர்கள், சுய தொழில் முயற்சியாளர்கள் கலந்து பயன் பெறமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-25,159)



# டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.24

யாழ். மாநகரசபைக்கு அண்மைய பிரதேசங்களில் கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட விசேட டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் 24 குடியிருப்புகள் சோதனையிடப்பட்டன.

டெங்கு பரவக்கூடிய சூழல் காணப்பட்ட 9 குடியிருப்புகளின் உரிமையாளர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், 46 குடியிருப்புகளுக்கு சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (எ-25,17)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமான நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணை உங்கள் முயற்சிக்கு ஆதரவு தருவார். சகோதரர்களால் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**இடபம்:** இன்று பொறுமையுடன் செயல்படவேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்றும் வகையில் அலைச்சல் ஏற்படும். உறவினர் வருகை உற்சாகம் தரும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு இருப்பதுடன், எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும்.

**கடகம்:** முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பயணத்தால் ஆதாயம் உண்டாகும். வாழ்க்கைத்துணைவழி உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும்.

**சிம்மம்:** முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பயணத்தால் ஆதாயம் உண்டாகும். வாழ்க்கைத்துணைவழி உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும்.

**கன்னி:** உத்திரம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் வெளியூர்ப் பயணங்களைத் தவிர்க்கவும். அஸ்தம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் முக்கியமான முடிவுகளை ஒருமுறைக்கு பலமுறை யோசித்து எடுப்பது நல்லது.

**துலாம்:** புதிய ஆடை, ஆபரணங்களை வாங்கும் யோகம் உண்டாகும். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். ஆனால், புதிய முயற்சிகளை பிற்பகலுக்கு மேல் தொடங்கு வது நல்லது. தாயின் தேவையைப் பூர்த்தி செய்வீர்கள்.

**விருச்சிகம்** : புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதர வகையில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். தாய் வழி உறவினர்களால் அனுகூலம் உண்டாகும்.

**தனுசு:** அதிர்ஷ்டகரமான நாள். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதர வகையில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். தாய் வழி உறவினர்களால் அனுகூலம் உண்டாகும்.

**மகரம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். முக்கியமான பிரமுகர்களின் அறிமுகமும் அவர்களால் ஆதாயமும் கிடைக்கும்.

**கும்பம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள் உதவி கேட்டு வருவார்கள். தாய்மாமன் வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மீனம்:** வழக்கமான பணிகளிலும்கூட கூடுதல் கவனம் தேவை. மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக் கூடும் என்பதால், பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

ஒவ்வொருவரும் உலகத்தை மாற்ற நினைக்கிறார்களேயொழிய தம்மை மாற்றிக்கொள்ள நினைப்பதில்லை.

– ஆபிரஹாம் லிங்கன்–


# நட்பெனப்படுவது...!

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஜனவரி மாதம் 12ஆம் திகதி சீனாவுக்குச் செல்வது உறுதியாகியிருக்கின்றது. இந்தியாவுக்கு அவர் பயணம் மேற்கொண்டு பல்வேறு ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகியுள்ள நிலையில், அவருடைய அடுத்த பயணம் சீனாவுக்கானதாக அமைந்துள்ளது. சீனாவிலும் பிரமாண்டமான வரவேற்பு, பல தரப்பட்ட ஒப்பந்தங்கள் என்பன ஜனாதிபதிக்குக் காத்திருக்கின்றன. ஆனால், பிராந்திய வல்லரசுகளைக் கைக்குள் போட்டுக்கொள்ளும் கைங்கரியத்தால் மட்டும் ஒரு நாடு நிறைவான வளர்ச்சியை அடைந்துவிடுமா? என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாததாகின்றது.

இந்தியாவைப் பகைக்காமல் சீனாவுடனும், சீனாவைப் பகைக்காமல் இந்தியாவுடனும் இலங்கை ஒப்பந்தங்களைச் செய்கின்றதுதான். மானியங்கள், உதவித் திட்டங்கள் மற்றும் இலவசங்களைப் பெறுகின்றதுதான். எனினும், 21ஆம் நூற்றாண்டுக்கான வர்த்தகக் கொள்கையாக இவ்வாறானதொரு போக்கைக் கொண்டிருப்பது சரியா? என்று வினவினால், அதற்கு இல்லையென்பதே பதில். பிராந்திய நட்பு நாடுகளைப் பகைக்காமலும், இறுகப்பற்றியும் வைத்திருக்கவேண்டும்தான். ஆனால், மாற்றுத் தெரிவும், பரந்துபட்ட வர்த்தகக் கொள்கையும் மிகமிக அவசியமானவை. மாற்றுத் தெரிவில்லாமல் பிராந்திய வல்லரசே கதி என்றிருந்த பல நாடுகள் வர்த்தகம் இழந்து, பொலிவிழந்து வறுமையைத் தேடிக்கொண்ட வரலாறு இருக்கவே செய்கின்றது.

உலகில் ஆகச் சிறந்த நட்பு நாடுகளில், அமெரிக்காவுக்கும் கனடாவுக்கும் மிகவும் முக்கியத்துவமான இடம் உண்டு. நூற்றாண்டுப் பழமையும் பாரம்பரியமும் உள்ள அந்த நட்பில், முன்னெப்போதும் இல்லாத அளவுக்குத் தற்போது விரிசல் ஏற்பட்டிருக்கின்றது. அமெரிக்க அதிபராகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் ட்ரம்ப், கனேடிய உற்பத்திகள் அமெரிக்காவுக்குள் இறக்குமதி செய்யப்பட வேண்டுமானால் 25 வீதம் கூடுதல் வரிகள் விதிக்கப்படும் என்று அறிவித்ததைத் தொடர்ந்து, தன் பொருளாதார அழிவை கண்முன் காண்கின்றது கனடா. கனடாவுக்கு இவ்வளவு அதிக சலுகைகள் தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டுமாயின், கனடாவை அமெரிக்காவின் 51ஆவது மாநிலமாக இணையுங்கள். கனேடியப் பிரதமர் அமெரிக்காவின் மேயராக இருக்கட்டும் என்றெல்லாம் ட்ரம்ப் வார்த்தைகளால் சீண்டியும் அதற்குக் காத்திரமான பதிலை வழங்கமுடியாது நிர்க்கதியாக நிற்கின்றார் கனேடியப் பிரதமர் ட்ரூடோ. ‘அமெரிக்காவைப் பகைத்தால் அதோகதி தான்’ என்பதே, இந்த அளவுகடந்த சகிப்புத் தன்மைக்குக் காரணம்.

பிராந்தியத்தில் நட்புறவு என்பது மிகமிக அவசியம் தான். ‘கூப்பிட்ட குரலுக்குச் செவிசாய்க்கப் போவது அயல்வீட்டானும் நண்பனும்தான்’. கொவிட் பெருந்தொற்றின்போதும், 2022ஆம் ஆண்டு ஏற்பட்ட திவால் நிலையின்போதும் இலங்கை அதை உணர்ந்து கொண்டது. அதை மறுப்பதற்கில்லை. ஆதலால், தன் நட்பு வட்டாரத்தைப் பலப்படுத்திக்கொண்டு, தன் சர்வதேசப் பிணைப்பையும், வர்த்தகத்தையும் மேலும் மேலும் ஆழமாக்க வேண்டிய தேவை இலங்கைக்கு இருக்கவே செய்கின்றது. பல தசாப்தங்களாக வெற்றிடமாக உள்ள இந்த விடயத்தில் ஜனாதிபதி அநுரகுமாரவாவது செயலாற்றுவாரா? என்பதுதான் இலங்கையர்களிடம் இப்போதுள்ள எதிர்பார்ப்பு. ஏனெனில், இந்தியாவுக்கு மோடிதான் எப்போதும் தலைமை தாங்குவார் என்றில்லை, அதுபோல் சீனாவுக்கு ஜின்பிங்தான் நிரந்தரத் தலைமைத்துவம் வழங்குவார் என்றும் கூறிக்கொள்ளமுடியாது. தலைமைத்துவமும் வெளிவிவகாரக் கொள்கைகளும் நிச்சயம் மாற்றங்களுக்கு உட்படுவன. எனவே நபர்களையும், நாடுகளையும் பார்த்து நட்புறவை வளர்ப்பதை விடுத்து, இலங்கையின் எதிர்கால நலன்களைக் கருத்திற் கொண்டு செயற்படுவதே பொருத்தமானது.




# அடுத்த ஆண்டு டிஜிற்றல் மயம்!

கொழும்பு, டிசெ.24
அடுத்த ஆண்டு நாட்டின் பொதுத்துறையை டிஜிற்றல் மயமாக்கும் திட்டம் ஆரம்பிக்கப்படும் என்று இளைஞர் விவகார பிரதி அமைச்சர் எரங்க குணசேகர தெரிவித்துள்ளார்.
அடுத்த ஆண்டு நாட்டை டிஜிற்றல் மயமாக்குவதற்குத் தயாராகி வருகின்றோம். 'கிளீனிங் ஸ்ரீலங்கா' என்ற திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளோம். நாட்டில் பெரும் சமூக மாற்றத்தை ஏற்படுத்த எதிர்பார்த்துள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார். (எ-இ)

## அரிசி வரியை குறைக்கக் கோரிக்கை

கொழும்பு, டிசெ.24
அரிசி இறக்குமதிக்கான வரியைக் குறைக்க வேண்டும் என்று வர்த்தகர்கள் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளனர்.
ஒரு கிலோ அரிசிக்கு சுங்க அதிகாரசபையால் விதிக்கப்பட்டுள்ள 65 ரூபா வரியைக் குறைத்தால் சந்தையில் கட்டுப்பாட்டு விலையில் அரிசியைப் பெற்றுக் கொள்ளமுடியும் என்று நுகர்வோர் அமைப்புகளும் சுட்டிக்காட்டியுள்ளன. (எ-இ)

## வாகனங்களை சோதனையிடும் நடவடிக்கை ஆரம்பம்

கொழும்பு, டிசெ.24
பஸ்கள் உட்பட வாகனங்களைச் சோதனையிடும் நடவடிக்கைகளை நாடளாவிய ரீதியில் நேற்று முதல் ஆரம்பிக்குமாறு பதில் பொலிஸ்மா அதிபர் பணிப்புரை விடுத்துள்ளார். வாகன விபத்துகளைக் குறைக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (எ-இ)

## போலியான 5,000 ரூபாவுடன் மாணவர்கள் கைது

கொழும்பு, டிசெ.24
5 ஆயிரம் ரூபா நாணயத்தாள்கள் போன்ற போலி நாணயத்தாள்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் 4 மாணவர்கள் திகன பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து 57 போலியான நாணயத்தாள்கள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)



## பாடசாலை உபகரணங்களின் விலைகள் அதிகரிப்பு!

கொழும்பு, டிசெ.24
பாடசாலைத் தவணை ஆரம்பிக்கவுள்ள நிலையில் பாடசாலை உபகரணங்களின் விலைகள் அதிகரித்துள்ளன என்று பெற்றோர் சுட்டிக்காட்டுகின்றனர். சில பாடசாலை உபகரணங்களின் விலைகள் இருமடங்காக உயர்ந்துள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
பாடசாலை உபகரணங்களுக்கு விதிக்கப்பட்ட வரியை அரசாங்கம் நீக்கினால் இந்த நிலைமைக்குத் தீர்வு கிடைக்கும் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (எ-இ)

## கல்வித்துறையின் மேம்பாட்டுக்கு உதவும் ஆசிய அபிவிருத்தி வங்கி

கொழும்பு, டிசெ.24
கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள சவால்களை வெற்றிகொள்ள ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள் உறுதியளித்துள்ளனர். ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான வதிவிடத் தூதுக்குழுவின் பணிப்பாளர் டகாபுமி கடோனோவுக்கும், பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கும் இடையே நேற்றுமுன்தினம் நடந்த சந்திப்பிலேயே இந்த உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது. புதிய கல்விக்கொள்கையை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்காக பாடசாலைகளின் உட்கட்டமைப்பு மேம்பாடு, ஆசிரியர் அதிபர் பயிற்சி மற்றும் தொழில்நுட்பப் பயன்பாட்டின் முக்கியத்துவம் தொடர்பாக பிரதமர் இந்தக் கலந்துரையாடலில் எடுத்துரைத்துள்ளார். (எ-இ)



நாளை
புதன்கிழமை - மார்கழி - 10
25.12.2024
சுபநேரம் : 04.56 - 06.26
ராகுகாலம் : 12.26 - 01.56

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வடக்கு மாகாணத்தில்

# அரிசியின் விலைகள் கட்டுப்படுத்தப்படும்

யாழ்ப்பாணம்,டிசெ.24
வடக்கு மாகாணத்தில் இன்னும் ஒரு மாதத்துக்குள் அரிசியின் விலை நிச்சயம் குறைவடையும் என்றும் எதிர்வரும் காலங்களில் வடக்கு மாகாணத்திலுள்ள அரிசி ஆலை உரிமையாளர்களே, வடக்கு மாகாணத்தில் விளையும் நெல்லின் பெரும்பகுதியைக் கொள்வனவு செய்வதற்குரிய பொறிமுறை உருவாக்கப்படும் என்றும் கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகரன் மற்றும் ஆளுநர் நா.வேதநாயகன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை வடக்கு மாகாண அரிசி ஆலை உரிமையாளர்களுடன் இடம்பெற்ற சந்திப்பில் அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

கலந்துரையாடலில் இறக்குமதி செய்யப்பட்ட அரிசியையும் நிர்ணய விலையில் விற்பனை செய்யாமல், அவற்றின் 'லேபல்கள்' மாற்றப்பட்டு அதிகரிக்கப்பட்ட விலைக்கு விற்பனை செய்யப்படுவதாக அரிசி ஆலை உரிமையாளர்களால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்ட நிலையில், அது தொடர்பில் கூடிய கவனம் செலுத்துமாறு மாவட்ட நுகர்வோர் அதிகாரசபைக்கு ஆளுநர் பணிப்புரை விடுத்தார்.

அமைச்சர் இ.சந்திரசேகரன் குறிப்பிடுகையில், அரிசி ஆலை உரிமையாளர்களான உங்களை நஷ்டத்தில் வீழ்த்துவதையோ மக்களை கஷ்டத்தில் வீழ்த்துவதையோ விரும்பவில்லை . எதிர்காலத்தில் வடக்கில் 3 இடங்களில் புதிதாக அரிசி ஆலையை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. வடக்கு மாகாணத்தில் விளையும் நெல்லின் பெரும்பகுதியை அரிசி ஆலை உரிமையாளர்களே கொள்வனவு செய்வதற்குரிய பொறிமுறை உருவாக்கப்படும் என்றும் குறிப்பிட்டார். (ச-27)

# உலக சாதனைப் புத்தகத்தில் இலங்கைப் பெண்கள் தடம்



யாழ்ப்பாணம் , டிசெ. 24
தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி சாதனை படைத்தமைக்காக இந்தியாவை தளமாகக் கொண்ட கலாம் உலகசாதனைப் புத்தகத்தில் இலங்கைப் பெண்கள் பதிவாகியுள்ளனர். முள்ளியவளையை சேர்ந்த பவுசர் ஸ்ரீபாஸ்கரன் முத்துலட்சியின் பயிற்சி வழிகாட்டல் ஊடாக நாட்டின் பல்வேறு மாவட்டத்தைச் சேர்ந்த 46 பெண்களே இவ்வாறு சாதனை படைத்துள்ளனர். அவர்களுக்கு சான்றிதழ் மற்றும் நினைவுச் சின்னங்கள் வழங்கும் நிகழ்வு முள்ளியவளைப் பகுதியில் உள்ள தனியார் மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன், நைட்டா தொழிற்பயிற்சி நிறுவனத்தின் மாவட்ட முகாமையாளர் எஸ்.சிவகௌரி உட்படப் பலரும் கலந்துகொண்டனர். (ச-22,19)




அமரர் வேலும் மயிலுவின் 101வது ஜனன தினத்தை முன்னிட்டு பொருளாதார ரீதியாக நலிவுற்ற தெரிவு செய்யப்பட்ட 50 குடும்பங்களுக்கு வேலும் மயிலும் பவுண்டேசனினால் உலருணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு நிர்வாக அலுவலகத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. (ச-22,100)

# அல்லாரை வீதியில் ஒளிராத மின்விளக்குகள்

கொடிகாமம், டிச. 24
சாவகச்சேரி நகர சபைக்குட்பட்ட மீசாலை - அல்லாரை வீதியில் பொருத்தப்பட்ட மின்விளக்குகள் கடந்த ஆறு மாதங்களாக ஒளிராமல் காணப்படுகின்றன. இந்த வீதி குண்டும் குழியுமாக இருப்பதால் மின்விளக்குகள் ஒளிராத காரணத்தால் இரவு நேரங்களில் பிரயாணம் செய்யும்போது விபத்துகள் நேரிடுகின்றன. சாவகச்சேரி நகரசபையினால் சோலை வரி பெறப்படும் நிலையில் மின்விளக்குகள் ஒளிரவில்லை என மக்கள் தெரிவித்தும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

எனவே சாவகச்சேரி நகரசபையினர் பழுதடைந்த மின்விளக்குகளை அகற்றி புதிதாக பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் . (ச-22,159)



# கலாசார பெருவிழா





யாழ்ப்பாணம், டிசெ.24
வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் கரைச்சிப் பிரதேச செயலகமும் கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்தும் கரைச்சிப் பிரதேச செயலக 2024ஆம் ஆண்டுக்கான கலாசாரப்பெருவிழா 'தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' எனும் தலைப்பில் கரைச்சிப் பிரதேச செயலகத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகம் கலந்து கொண்டுள்ளார். விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்டச் செயலர் எஸ்.முரளீதரன், வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள், கலைஞர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-33-113)






# முல்லைத்தீவில் வெடிபொருள்கள் மீட்பு

யாழ்ப்பாணம், டிசெ.24
முல்லைத்தீவு, கள்ளப்பாடு கடற்கரை பகுதியில் 14.7 கிலோ நிறையுடைய வெடிப்பொருள் தொகுதி நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவு பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. கள்ளப்பாடு கடற்கரைப் பகுதியில் நிலத்தில் புதையுண்ட நிலையில் இந்த வெடிபொருள் பகுதி மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில் மேலதிக விசாரணையினை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமப்புறப் பாடசாலைகளில் உள்ள

# துறைசார் பாட ஆசிரியர்களின் வெற்றிடங்களை நிரப்புங்கள்

உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கத்தின் தலைவர் கோரிக்கை

**கொழும்பு, டிசெ.24**

**கிராமப்புறப் பாடசாலைகளில் துறைசார்ந்த பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லாததால் மாணவர்களின் கல்வி பின்னோக்கிச் செல்கின்றது என்று உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கத்தின் தலைவர் த.தர்மகுமாரன் தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கிராமப்புறப் பாடசாலைகளில் துறைசார்ந்த பாடங்களுக்கு நீண்டகாலமாக ஆசிரியர்கள் நிரப்பப்படாதுள்ளனர். இது ஏழை மாணவர்களின் கல்வியைக் கேள்விக்குள்ளாக்குகின்றது. 2025 ஆம் ஆண்டாவது கிராமப்புறப் பாடசாலை மாணவர்களின் கல்வியை வளம்பெறச் செய்யவேண்டும். நகர்ப்புறப் பாடசாலைகள் தங்களுக்குத் தேவையானவற்றை உடனுக்குடன் பெற்றுக்கொள்கின்றன. ஆனால் கிராமப்புறப் பாடசாலைகளில் அவ்வாறு இல்லை. நகர்புறப் பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் வடிகட்டப்பட்ட பின்னரே கிராமப்புறப் பாடசாலைகளின் வெற்றிடங்கள் நிரப்பப்படுகின்றன. உளரீதியான பிரச்சினைகளைக் கொண்ட ஆசிரியர்கள் கூடக் கிராமப்புறப் பாடசாலைகளுக்கே இடமாற்றப்படுகின்றனர். இதனால் பாதிக்கப்படுவது மாணவர்கள் மட்டுமே. இருக்கும் ஆசிரிய வளத்தைக் கொண்டே பங்கீடு செய்ய முடியும் என்பதை ஏற்றுக்கொள்ளும் அதேநேரம், இடமாற்ற இடர்பாடுகளைச் சீர்செய்து ஆசிரியர்களும் பாதிக்கப்படாதவகையில் ஆசிரிய வளங்களை கிராமப்புறப் பாடசாலைகளை நோக்கி நகர்த்த வேண்டியதும் அவசியம். இல்லையெனில் கல்வி வீழ்ச்சியடைவதுடன், மாணவர் இடைவிலகலும் அதிகரிக்கும். அடுத்த ஆண்டு சரியான முறையில் இடமாற்றங்களைச் செய்து, கிராமப்புறப் பாடசாலைகளில் உள்ள துறைசார்ந்த ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்பவேண்டும் - என்றார். (எ-125)




## நவரத்தினத்துக்கு நினைவேந்தல்

யாழ்ப்பாணம், டிசெ.24

தேசக் கோட்பாட்டின் தந்தை என அழைக்கப்படும் நாட்டுப் பற்றாளர் வி.நவரத்தினத்தின் 18ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு யாழ்.கொக்குவிலில் அமைந்துள்ள தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. மூத்த போராளி பொன் மாஸ்டர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பொதுச்சுடர் ஏற்றல், மௌனவணக்கம், மலர் அஞ்சலி, நினைவுரை போன்றவை இடம்பெற்றன. (எ-25,66)

## இனந்தெரியாத நோயால் சம்பா செய்கை அழிவு!

கிளிநொச்சி,டிசெ.24

புளியம்பொக்கணை கமநலசேவை பிரிவுக்குட்பட்ட புளியம்பொக்கணை சின்னவரணி என்னும் பகுதியில் பெரும்போக சம்பா நெற்செய்கையில் ஈடுபட்டிருந்த விவசாயி ஒருவரது நெற்பயிரில் 70 நாள்கள் கடந்த நிலையில் இணங்காண முடியாத நோய்த் தாக்கம் ஏற்பட்டுள்ளது. இதனால் ஐந்து ஏக்கர் அளவிலான சம்பா நெற்செய்கை முற்றுமுழுதாக அழிந்துள்ளது.

இது தொடர்பாக விவசாயி தெரிவித்ததாவது:-

விவசாய அமைப்புகள் மற்றும் கமநலசேவைத் திணைக்களத்தினர் நெற்செய்கைக்கு ஏற்பட்டுள்ள அழிவுக்கான காரணத்தைக் கண்டறியவேண்டும். இந்தநிலை தொடருமாயின் இனிவரும் காலங்களில் நெற்செய்கை மேற்கொள்வது மிகவும் கடினமாக அமையும், தற்பொழுது நாட்டில் அரிசிக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஏற்பட்டுள்ள அழிவை நிவர்த்தி செய்யமுடியாதுள்ளது - என்றார். (எ-33-113)

## அபிவிருத்திச்சங்க கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ.24

வடமாகாண அபிவிருத்தி அலுவலர்கள் சங்கப் பிரதிநிதிகளுக்கும், மத்திய உள்நாட்டு அலுவல்கள் அமைச்சருக்குமிடையிலான கலந்துரையாடல் அமைச்சின் அலுவலகத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. அதில் அபிவிருத்தி அலுவலர்களின் தீர்க்கப்படாத பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-25,9)




## முதலை கடித்து பெண் உயிரிழப்பு

வவுனியா, டிசெ.24

வவுனியா, பாவற்குளத்தில் பெண் ஒருவர் முதலை கடித்ததால் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை நடந்துள்ளது.

பாவற்குளம், சூடுவெந்தபுலவைச் சேர்ந்த ஆதம்பாவா முசுறியா (வயது -67) என்ற பெண்ணே உயிரிழந்தவராவார். மாடுகளை மேய்ப்பதற்காகச் சென்ற இவர், ஆற்றுப் பகுதிக்குள் இறங்கமுற்பட்டபோது முதலையால் கடியுண்டு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் உலுக்குளம் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (எ-இ)





வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட உரும்பிராய் தெற்கு, யோகபுரம் கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட 157 குடும்பங்களுக்கு 7 இலட்சத்து 85 ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தியாவசிய உணவுப் பொருள்கள் வடமராட்சி தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை யோகபுரம் அண்ணா சனசமூக நிலையத்தில் நடைபெற்றது. (எ -25,27)

## நத்தாரை முன்னிட்டு நடைபாதை கடைகள்

யாழ்ப்பாணம், டிசெ.24

நத்தார்ப் பண்டிகையை முன்னிட்டு நடைபாதை வியாபாரிகள் யாழ்.நகருக்கு படையெடுத்து வருகின்றனர். இந்த நடைபாதை கடைகளுக்காக யாழ். முற்றவெளி முனீஸ்வரர் ஆலயத்துக்கு முன்பான வீதியோரங்களில் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. வியாபாரிகள் அங்கு கொட்டகைகள் அமைத்து விற்பனையில் ஈடுபட்டுள்ளனர். (எ-25,17)

## மாட்டுடன் விபத்து தந்தை, மகள் காயம்

யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள், வீதியைக் கடந்த மாட்டுடன் மோதியதில் 11 வயது மாணவியும் தந்தையும் காயமடைந்துள்ளனர். மோட்டார் சைக்கிளும் சேதமடைந்தது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை முகமாலை தேவாலயத்துக்கு அருகில் ஏ-9 வீதியில் இடம்பெற்றது. (எ-25,9)

பூநகரி, அரசபுரத்தில்

## பொதுக்கிணறு இராணுவத்திடம்; தண்ணீருக்கு அல்லாடும் மக்கள்

கிளிநொச்சி, டிசெ.24

குடிதண்ணீரைப் பெறுவதில் சிரமங்களை எதிர்கொள்ளவேண்டியுள்ளது என்று கிளிநொச்சி, பூநகரி அரசபுரத்தில் உள்ள மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அந்தப் பகுதி மக்களின் குடிதண்ணீர்த் தேவையை நிறைவு செய்வதற்காக 2006ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட பொதுக்கிணறு தற்போது இராணுவத்தின் கட்டுப்பாட்டு எல்லைக்குள் அடைக்கப்பட்டுள்ளது. இதனால் தினமும் 4 மணிமுதல் 5 மணிவரை இராணுவ முகாமின் வாசலில் நீர் கொள்கலன்களை அடுக்கி வரிசையில் நின்று குடிதண்ணீர் பெற வேண்டியிருக்கின்றது.

ஒரு நாளுக்கு 20 லீற்றர் குடிதண்ணீர் மட்டுமே ஒன்றுக்கு வழங்கப்படுவதால், குடிதண்ணீருக்கு நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டியுள்ளது-என்றனர். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 45ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 04 . 08 . 1974

உதிர்வு 10 . 11 . 2024



**அமரர் பாஸ்கரன் வாசுகி**
**(அம்பாள் சைவ உணவகம்)**

உங்கள் மதிமுகமும் மகிழ்வான பேச்சும்
எங்களிடமிருந்து பிரிந்து 45 நாட்கள் முடிந்தாலும்
நீங்காத பேரலையாக உங்கள் நினைவும்
என்றும் எம் மனங்களில் நிறைந்திருக்கும்
இறைவனடியில் ஈதே உங்கள்
ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கும்.

அச்செழு மத்தி,
நீர்வேலி.

கணவர் - பாஸ்கரன்
பிள்ளைகள்
074 054 6472

(CS/2074) J-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 03 . 11 . 1951

மறைவு 23 . 12 . 2024



## தில்லையம்பலம் ஜெயமணிதேவி

நயினாதீவை பிறப்பிடமாகவும் நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் ஜெயமணிதேவி நேற்று (23.12.2024) திங்கட்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் (மாசிலாமணி மாஸ்ரர்)-கமலாட்சிஅம்மா தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான மணிவாசகர், ஞானானந்தர், சோமஸ்கந்தர் மற்றும் மணிமேகலாதேவி, சந்திரபாலர், பரமானந்தர் ஆகியோரின் சகோதரியும் சற்குணேஸ்வரி, ஞானசோதி, ரதிதேவி காலஞ்சென்ற இராஜசிங்கம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24.12.2024) செவ்வாய்க்கிழமை 15/14, சங்கிலியன் வீதி, நல்லூரில் நடைபெற்று தக்னக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**தி.பரமானந்தர்**
**(சகோதரன்)**

(CS 2082) V-1

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர்
## முருகேசு தங்கராசா



காலங்கள் கடந்தாலும்
ஆண்டுகள் சென்றாலும்
எங்கள் மனதில்
என்றும் நிலைத்திருப்பார்
அன்பின் அடையாளமாக
அறத்தின் புதல்வனாக
தர்மத்தின் தலைவனாக
பொன்னியின் செல்வனாக
காலத்தின் தலைவனாக
அன்பில் சிவமாக
என்றும் எங்களின் தந்தையாக வாழ்கிறார்.

மலர்வு 24.06.1947

உதிர்வு 06.12.2023

கோப்பாய் மத்தி.

குடும்பத்தினர்

(CS/57003) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளடங்கலான அசைவாற்றல் மறுவரையறைசெய்யப்படுகின்றது : சமீரவின் வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்திய டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி



டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி நிறுவனம் தனியார் கம்பனியொன்றில் நிறைவேற்றுத் தரத்தில் முழுநேரமாகப் பணியாற்றும் 27 வயதுடைய மாற்றுத்திறனாளி திரு.சமீர கயஷானின் தேவைக்கு ஏற்ற வகையில் விசேடமாக வடிவமைக்கப்பட்ட மின்னியல் முச்சக்கர வண்டியை உருவாக்கி நிலையான புதிய படைப்புக்கு அர்த்தமுள்ள பங்களிப்பைச் செய்துள்ளது. மாற்றுத்திறனாளிகளின் நடமாட்டத்திற்கான ஒத்துழைப்பை விஸ்தரித்தல், சமூகப் பொறுப்புமிக்க நிலையான போக்குவரத்துத் தீர்வுகளை வழங்குவது தொடர்பில் குழுமம் கொண்டிருக்கும் அர்ப்பணிப்பை பறைசாற்றும் வகையில் இது அமைந்துள்ளது.

திரு.கயஷான் அவர்கள், கால்கள் அற்ற நிலையில் பிறந்தது முதல் பெற்றோரால் கைவிடப்பட்டமை, களுத்துறையில் உள்ள இல்லமொன்றில் வளர்ந்தமை என வாழ்க்கையில் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்துள்ளார். உடல்ரீதியாக அவருக்கு மட்டுப்பாடுகள் இருந்தபோதும், கல்வியில் சிறப்பை வெளிப்படுத்தி கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பட்டத்தைப் பெற்று தனியார் நிறுவனமொன்றில் தற்பொழுது பணியாற்றுகின்றார்.

நடமாடுவதில் அவர் எதிர்கொண்ட சிக்கல்களுடன், அரச அல்லது தனியார் பாரம்பரிய போக்குவரத்துமுறைகளை அவரால் அடிக்கடி அணுகமுடியாமல் போனதுடன், இயலாமை காரணமாக டக்ஸி சேவைகளிலும் அவர் தொடர்ச்சியான நிராகரிப்புக்களுக்கு முகங்கொடுத்தார்.

இது குறித்த தனது அனுபவம் பற்றிக் கருத்தைப் பகிர்ந்த திரு.கயஷான் குறிப்பிடுகையில், "எனது நிலைமையை டேவிட் பீரிஸ் குழுமத்திற்குத் தெரியப்படுத்தியதும், எனது நடமாட்டம் மற்றும் சுதந்திரமான முன்னேற்றத்துக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட மின்னியல் முச்சக்கரவண்டியை வழங்கினர். டேவிட் பீரிஸ் குழுமம் எனது தேவைக்கு ஏற்ற வகையில் வண்டியை வடிவமைத்துத் தந்தது மாத்திரமன்றி, வாகனச் சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் எவ்வித சலிப்பும் இன்றி எனக்கு உதவிசெய்திருந்தார்கள். டேவிட் பீரிஸ் குழுமத்திற்கு நன்றிகள். ஏனையவர்கள் போன்று என்னாலும் தற்பொழுது மிகவும் நம்பிக்கையுடன் பயணிக்க முடியும்" என்றார் பெருமையுடன்.

திரு.கயஷானின் தேவைக்கு ஏற்ற வகையில் டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி நிறுவனத்தின் ஆய்வு மற்றும் மேம்பாட்டுக் குழு இந்த மின்னியல் முச்சக்கரவண்டியை உருவாக்கியிருந்தது. இந்தப் புதுமையான வாகனம் அவருக்கு அதிக சுதந்திரத்தையும் இயக்கத்தையும் வழங்கியது மட்டுமல்லாமல், சமூகத்தில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்த டேவிட் பீரிஸ் குழுவின் தொடர்ச்சியான முயற்சிகளையும் பிரதிபலித்தது. குறிப்பாக குறைபாடுகள் உள்ளவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் புதுமையான தீர்வுகளை வழங்குகின்றது. மேலும், DPMC நிறுவனம், மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்துடன் நெருக்கமாகப் பணியாற்றி, அவர் முறையான ஓட்டுநர் உரிமத்தைப் பெற்றிருப்பதை உறுதிசெய்து, புதிய வாகனத்தை சட்டப்பூர்வமாகவும் பாதுகாப்பாகவும் இயக்குவதை சாத்தியமாக்கியது.

டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி நிறுவனத்தின் ஆய்வு மற்றும் மேம்பாட்டுக் குழுவின் தலைவர் இது குறித்த அனுபவத்தைப் பகிர்ந்துகொள்கையில், "தனிப்பட்ட தேவைகளில் கவனம் செலுத்துவதன் மூலமும், எங்கள் தொழில்நுட்ப திறன்களை மேம்படுத்தி அவற்றின் ஊடாக சேவைகளை வழங்குவதை விட அதிகமான தீர்வுகளை உருவாக்குவது எமது நோக்கமாக உள்ளது. இதன் ஊடாக வாழ்க்கையை மாற்றியமைப்பதற்கான திறன் கிடைக்கின்றது. தனக்காக மாற்றியமைக்கப்பட்ட மின்னியல் முச்சக்கர வண்டியின் மூலம் சமீர கொழும்பின் வீதிகளில் நம்பிக்கையுடன் பயணிக்க முடிவதுடன், அவருக்கு இனிமேல் போக்குவரத்துக் குறித்த சவால்கள் இருக்காது" என்றார்.

அனைவரையும் உள்ளடக்குவது மற்றும் நிலைப்புத் தன்மையை ஊக்குவித்தல் டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி நிறுவனம் கொண்டிருக்கும் அர்ப்பணிப்புக்கு சமீரவின் இந்தப் பயணம் சிறந்த உதாரணமாக அமைந்துள்ளது. இது போன்ற கூட்டாண்மை சமூகம் சார்ந்த முயற்சிகள் எவ்வாறு வாழ்க்கையை மாற்றி பிரகாசமான எதிர்காலத்தின் நம்பிக்கையை ஊக்குவிக்கின்றன என்பதையும் பறைசாற்றுகின்றன. உற்சாகமூட்டும் இந்த வெற்றிக்கதையானது இயலாமையுடைய நபர்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதில் டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி நிறுவனத்தின் உறுதியான நிலைப்பாட்டை எடுத்துக் காட்டுவதுடன், அவர்களின் நிலையான எதிர்காலத்தில் அர்த்தமுள்ள தாக்கத்தை உருவாக்குகின்றது.



## அமெரிக்க அதிபராக வரமாட்டார் மஸ்க்

வொஷிங்டன், டிசெ. 24

எலான் மஸ்க்கால் ஒருபோதும் அமெரிக்க அதிபராக வரமுடியாது. அதற்கு வாய்ப்பே இல்லை என்று ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

குடியரசுக் கட்சிக்குள் எலான் மஸ்க் செல்வாக்குமிக்க நபராக உருவெடுத்துள்ளார். ட்ரம்புக்குப் பின்னர் அல்லது இன்னும் சில வருடங்களில் எலான் மஸ்க் அமெரிக்க அதிபராக உருவெடுப்பார் என்று அண்மைக் காலமாகத் தொடர்ச்சியாகக் கருத்துப் பகிர்வுகள் இடம்பெற்று வருகின்றன. இவ்வாறானதொரு நிலையிலேயே, எலான் மஸ்க்கால் ஒருபோதும் அமெரிக்க அதிபராக வரமுடியாது என்று ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அரசியலில் எலான் மஸ்க் சக்தி வாய்ந்த நபராக உருவெடுப்பார். இப்போது இருப்பதை விடவும் அவருடைய வளர்ச்சி மேலும் அதிகரிக்கும். குடியரசுக் கட்சியின் தீர்மானத்திலும், அமெரிக்க அரசின்தீர்மானங்களிலும் எலானின் செல்வாக்கு பெரியதாக இருக்கும். ஆனால், ஒருபோதும் அவரால் அமெரிக்க அதிபராக வரமுடியாது என்பதை உறுதியாகச் சொல்கின்றேன் என்று ட்ரம்ப் கூறியுள்ளார். அமெரிக்காவில் பிறக்காத எவரும் அமெரிக்க அதிபராக முடியாது என்று எங்களின் அரசமைப்புக்கூறுகின்றது. எலான் மஸ்க் தென்னாபிரிக்காவில் பிறந்த அமெரிக்கக் குடிமகன். எனவே, அவரால் வெள்ளை மாளிகையின் உயர் அதிகாரத்தில் அமர முடியாது என்றும் ட்ரம்ப் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

### மதுக்...

மதுபோதைக்கு எதிரான இயக்கம் மற்றும் வடக்கு - கிழக்கு மறுவாழ்வு அமைப்பின் ஏற்பாட்டில் கிளிநொச்சி டிப்போ சந்தியடியில் இந்தப் போராட்டம் இடம்பெறவுள்ளது. ஆர்ப்பாட்டத்தின் நிறைவில் ஜனாதிபதி அநுரவுக்கு அனுப்பிவைப்பதற்காக மனுவொன்றும் வழங்கப்படவுள்ளது. (அ-ம-66)

### 1,050...

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் இது தொடர்பான செயலமர்வு நேற்றுத் திங்கட்கிழமை நடைபெற்றது. யாழ்ப்பாணம் பதில் மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நடைபெற்ற இந்தச் செயலமர்வில், ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆலோசகர் உபாலி தாணகம மற்றும் கொழும்பு பல்கலைக்கழகச் சிரேஷ்ட ஆய்வாளர் நாமல் வீரசேன ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றியதுடன், அலுவலர்களுக்கு உரிய அறிவுறுத்தல்களையும் வழங்கினார்கள்.

இதன்போதே, ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுசரணையில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வணிகங்களுக்கு மின் கட்டணத்தில் நிவாரணம் வழங்கும் திட்டத்தில் தேசிய ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட ஒன்பது மாவட்டங்களில் யாழ். மாவட்டமும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும், ஆயிரத்து 50 பேர் தொடர்பில் பரிசீலனைகள் இடம்பெறுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-66)

### யுவதி...

எழுதுமட்டுவாழ் பகுதியைச் சேர்ந்த யுவதியே உயிரிழந்த நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ம-159)

## 95 ஊடகவியலாளர்கள் இவ்வாண்டு மாயம்!

இந்த வருடம் இதுவரையான காலப்பகுதியில் 34 நாடுகளைச் சேர்ந்த 95 ஊடகவியலாளர்கள் காணாமல் போயுள்ளனர் என்று எல்லை கடந்த பத்திரிகையாளர் அமைப்பு தெரிவித்துள்ளது. இவர்கள் காணாமல் போனமை தொடர்பில் அதிகாரத்தில் இருப்பவர்கள் மீதே குற்றம் சுமத்துவதாகவும் எல்லை கடந்த பத்திரிகையாளர் அமைப்பு தெரிவித்துள்ளது. (ஏ-22,6)

## அமெரிக்காவில் இயங்கிய சீனப் பொலிஸ் நிலையம்



அமெரிக்காவின் நியூயோர்க் நகரில், சீன அரசாங்கத்தின் சார்பில் இரகசியப் பொலிஸ் நிலையமொன்று நடத்தப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. சீனாவின் உளவுத்துறையின் உத்தரவுக்கு அமைய, சென் ஜின்பிங் என்பவரும் லு ஜியான் வாங் என்பவரும் நியூயோர்க் நகரத்தில் உள்ள கட்டடமொன்றில் இரகசியப் பொலிஸ் நிலையத்தை அமைத்துள்ளனர். இந்தப் பொலிஸ் நிலையம், அமெரிக்காவை உளவு பார்ப்பதற்குச் சீனாவால் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது என்று அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்த இரகசிய பொலிஸ் நிலையத்தை, அமெரிக்காவுக்கு எதிரான சக்திகளை ஒருங்கிணைக்க சீனா பயன்படுத்தியுள்ளது. உலகில் 53 நாடுகளில் இவ்வாறான பொலிஸ் நிலையங்களை சீனா இயக்கி வருகின்றது என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஆனால், அமெரிக்காவின் குற்றச்சாட்டுகளை சீனா திட்டவட்டமாக மறுத்துள்ளது. 'அமெரிக்காவால் குறிப்பிடும் கட்டடம் சீனாவுக்குச் சொந்தமானது என்பதை ஏற்கின்றோம். ஆனால், சீனர்களுக்கான உதவிகளை வழங்குவதற்காகவே அந்தக் கட்டடம் பயன்படுத்தப்பட்டது. வேறெந்த நோக்கங்களுக்காகவும் அது பயன்படுத்தப்படவில்லை என்றும் சீனா மேலும் கூறியுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# கரோல் நிகழ்வு

மன்னார், டிசெ.24

மன்னார், தள்ளாடியிலுள்ள 54 ஆவது இராணுவ படைப்பிரிவின் ஏற்பாட்டில், நத்தார் கரோல் நிகழ்வு, மன்னார் புனித செபஸ்தியார் ஆலயத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் விருந்தினராக மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, இராணுவத்தின் வன்னி கட்டளைத் தளபதி மேஜர் ஜே.பி.சி.பீரிஸ் மன்னார் மாவட்டசெயலர் க.கனகேஸ்வரன் உட்பட பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் ,அருட் தந்தையர்கள் கலந்து கொண்டனர். (ச-25, 56)



கனவு வலைத்தளத்தின் ஏற்பாட்டில், சமூக நட்புறவை வளர்க்கும் நோக்கில் தெற்கிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த மூவினங்களைச் சேர்ந்த 100 பேர் கொண்ட குழுவினர் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ். கோட்டைசுற்றுப்புறங்களை துப்புரவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். (ச-9)



கடந்த வருட தேசிய வாசிப்பு மாதத்தில் சிறந்த செயற்பாடுகளை செயற்படுத்தியமைக்காக, தேசிய நூலக ஆவணப்படுத்தல் சபையினால், சாவகச்சேரி பிரதேசசபையின் பொது நூலகத்துக்கு 'தேசிய வாசிப்பு மாத விருது' அண்மையில் வழங்கப்பட்டது. (ச-25, 9)

# விளையாட்டுக் கழகங்களுக்கு உபகரணங்கள் வழங்கிவைப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 24

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில், கரைச்சிப் பிரதேச மட்ட விளையாட்டுப் போட்டியில் முதலாம் இரண்டாம் இடங்களைப் பெற்ற விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. வடக்கு மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழ் கரைச்சி பிரதேச செயலர் பிரிவின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட 9 கழகங்களுக்கு முதற்கட்டமாக குறித்த உதவி வழங்கி வைக்கப்பட்டன. (ச-22,113)



சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் வாராந்த நிகழ்வை முன்னிட்டு, சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் குழுவினரின் தெய்வீக முருகன் நாம பஜனை கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (ச-25, 66)



முதியோர் தினத்தினை முன்னிட்டு, நானாட்டான் பிரதேசசபையின் பாதீட்டின் கிழ் ஆரோக்கிய மாதா முதியோர் சங்க உறுப்பினர்களுக்கு முதியோர் சங்கத்தில் வைத்து கடந்த வெள்ளிக்கிழமை நுளம்பு வலைகள் வழங்கப்பட்டன. (ச-25)

# ஒளிவிழா

முல்லைத்தீவு, டிசெ.24

புதுக்குடியிருப்பு, வள்ளிபுனம் பகுதியிலுள்ள காருணியம் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் ஒளிவிழா நிகழ்வு, நிறுவன இயக்குநர் பி.செல்வநாயகம் தலைமையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் சிறப்பு விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட உதவிச் செயலர் எஸ்.குணபாலன், சிறப்பு விருந்தினர்களாக வண.செ.பெரியசாமி, சிறுவர் பேழை அபிவிருத்தி நிலைய இயக்குநர் போதகர் ரி.பிறேமமோகன், புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர்.ஹேரத், சிவில் பாதுகாப்புத் திணைக்கள கட்டளை அதிகாரி லெப்கேணர் பி.குமார, புதுக்குடியிருப்பு இலங்கை வங்கி முகாமையாளர் [illegible] ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-25, 19)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தலைமன்னார் வலயங்களுக் கிடையிலான குழு கரோல் பாடல் போட்டி, பங்குத்தந்தை எ.டெனி கலிஸ்ரஸ் தலைமையில் தலைமன்னார் பங்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. போட்டியின் முடிவுகள் கிறிஸ்து பிறப்பு நள்ளிரவுத் திருப்பலி முடிவில் அறிவிக்கப்படுமென தெரிவிக்கப்பட்டது. (ச-25, 56)



பச்சிலைப்பள்ளி பிரதேச கோவில் வயல் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரால் இயக்கப்பட்டுவரும் நெல் அரைக்கும் ஆலைக்கு, நெல் தீட்டும் இயந்திரம் கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கிவைக்கப்பட்டது. சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் பிரதேச செயலகத்தினால் இந்த இயந்திரம் வழங்கப்பட்டது. (ச-25, 9)



# கலந்துரையாடலும் கண்காட்சியும்

யாழ்ப்பாணம், டிசெ.24

ஜெனிவா சமவாயங்களின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சுவிஸலாந்து தூதரகம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த கண்காட்சியும் கலந்துரையாடல் நிகழ்வும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றன. நிகழ்வில் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான சுவிஸலாந்தின் பிரதித் தூதுவர் ஒலிவர், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் தூதுக்குழு தலைவர் சப்பாஸ், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் எஸ். சிறீசற்குணராஜா, சட்டத்தரணியும் பேராசிரியருமான வி.ரி.தமிழ்மாறன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-22,27)



ஊர்காவற்றுறை பிரதேசசபைக்கு உட்பட்ட அனலைதீவு பொதுநூலகத்தின் தேசிய வாசிப்பு மாத இறுதிநாள் நிகழ்வும் பரிசளிப்பு நிகழ்வும் நூலக மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றன. (ச-25, 9)

கொழும்புத்துறை மேற்கு வதிரிபீட விநாயகர் ஆலயத்தில், விநாயகர் பெருங்கதையை முன்னிட்டு கடந்த புதன்கிழமை பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன. (ச- 25, 17)





சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தினரால் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு நெடுங்கேணி கரடிப்பிலவுக் கிராமத்தில், தெரிவு செய்யப்பட்ட 56 குடும்பங்க ளுக்கு அத்தியாவசிய உலர் உணவுப் பொருள்கள் கடந்த புதன்கிழமை வழங்கி வைக்கப்பட்டன. சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் ஆச்சிரமத் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று குறித்த உலர் உணவுப் பொருள்களை வழங்கி வைத்தார். (ச-25, 66)



# தமிழ்மொழித் தினவிழாவும் மாணவர் கௌரவிப்பும்

கொடிகாமம், டிசெ. 24

தென்மராட்சி கல்வி வலயத்தினரின் தமிழ்மொழித் தினவிழாவும், மாணவர் கௌரவிப்பும் தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜன் தலைமையில், சாவகச்சேரி சிவன் கோவிலுக்கு அருகாமையில் உள்ள தென்மராட்சி கலாசார மண்டபத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாக துணுக்காய் வலயக் கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளர் து.ஜெயதேவன், சிறப்பு அதிதிகளாக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி லலிதாமலர் முகுந்தன், ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர் அ.மனோரஞ்சிதன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-25)



# வாழ்வாதார உதவிகள்

கிளிநொச்சி, டிசெ.24

கிளிநொச்சி மாவட்ட பெண்கள் தேசிய நிலையத்தால், பெண் தொழில் முயற்சியாளர்களுக்கான வாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. கிளிநொச்சி மாவட்ட பெண்கள் தேசிய நிலைய பிரதிப் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், கிளிநொச்சி மாவட்ட பதில் செயலர் எஸ்.முரளிதரன் உள்ளிட்ட மாவட்ட பெண்கள் தேசிய நிலைய உத்தியோகத்தர்கள் மற்றும் பயனாளிகள் கலந்து கொண்டனர். (ச-25, 113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திரிகா மாவத்தைக்கு விசேட பாதுகாப்பு!

கொழும்பு, டிசெ.24

வாகன கொள்ளையர்களின் பிடியில் சிக்கியுள்ள தாகக் கூறப்படும் மாலம்பே தொடக்கம் அம்பத்தளை வரையிலான சந்திரிகா குமாரதுங்க மாவத்தையில் விசேட பாதுகாப்பு வேலைத்திட்டத்தை ஏற்பாடு செய்யுமாறு மேல்மாகாண ஆளுநர் ஹனீப் யூசுப் பொலிஸார் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு நேற்றுப் பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்த வீதியால் பயணிக்கும் வாகனங்களை கொள்ளையர்கள் கொள்ளையிடுகின்றனர் என்று மக்களிடம் இருந்து கிடைத்த முறைப்பாடுகளை அடுத்து ஆளுநர் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார்.

சந்திரிகா குமாரதுங்க மாவத்தையைச் சுற்றியுள்ள பகுதிகளில் பொலிஸ் ரோந்துப் பணிகளை அதிகரிக்கவும், வீதியின் நுழைவாயிலின் இருபுறமும் பாதுகாப்பை அதிகரிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (எ-இ)


## 31ம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 31.05.1944 — மறைவு 24.11.2024

**திருமதி சிவராசா இராசம்மா**

(ஊரெல்லைத் தெரு,
மீசாலை கிழக்கு, மீசாலை)



நாள்கள் முப்பத்தொன்று ஆனதுவோ
உங்கள் முகம் கண்டு ஆறவில்லை நம் இதயம்
அன்பும் பாசமும் நிறைந்த பொக்கிஷம் நீங்கள்
நித்தம் புலம்புகின்றோம் உங்கள் திருமுகம் காணாமல்
ஆறவில்லை எங்கள் துயர்
உங்கள் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

குடும்பத்தினர்.

(CS 2081) V-1



## மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 10 . 1953 — மறைவு 23 . 12 . 2024



**சண்முகநாதன் தவமணி (சின்அன்ரி)**

சண்டிலிப்பாய் மேற்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகநாதன் தவமணி அவர்கள் நேற்று (23.12.2024) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை - தங்கம்மா அவர்களின் அன்பு மகளும், அமரர்களான இராமநாதன் - நாகரத்தினம் அவர்களின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராமநாதன் சண்முகநாதனின் (ஓய்வுபெற்ற அதிபர் அரசினர் தமிழ்கலவன் பாடசாலை சண்டிலிப்பாய்) அன்புக் கணவரும், அமரர் அருந்தவம் மற்றும் விமலதாசன், தர்மதாசன் தேவதாசன், கிருஸ்ணதாசன், பத்மசோதி, பத்மநிதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கோபிநாத் (கோபி), கோபிகா ஆகியோரின் அன்புத் தாயும், காண்டீபனின் அன்பு மாமியாரும், அமரர் கமலேஸ்வரியின் மற்றும் சிறிகாந் (நூலகர், வலி மேற்கு பிரதேச சபை - அராலி பொது நூலகம்) ஆகியோரின் மைத்துனியும், பரமேஸ்வரன் (லண்டன்), வசந்தினி ஆகியோரின் உடன் பிறவா சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2024) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மதியம் 12.00 மணியளவில் விளாவெளி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சண்டிலிப்பாய் மேற்கு,
சண்டிலிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்
077 852 0467, 077 609 0131

(CS 2083) A-1



## மரண அறிவித்தல்



**திருமதி வசந்தமலர் ஸ்கந்தவரோதயன்**

புன்னாலைக்கட்டுவன் தெற்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வசந்தமலர் ஸ்கந்தவரோதயன் நேற்று (23.12.2024) திங்கட் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சிவபாக்கியம் தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான செல்வநாயகம் - புனிதவதி தம்பதியரின் மருமகளும், ஸ்கந்தவரோதயன் இன் அன்பு மனைவியும், சம்பந்தநாதன், மகேந்திரன் காலஞ்சென்ற கதிர்காமநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுகிர்த்தா, பவித்திரா, சஞ்சீவன், பிரனவன், மணிவர்மன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், தர்ஷன், சிவரூபன் ஆகியோரின் மாமியாரும், கோவர்தினி, மதுனிகா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விலங்கன் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்



## மரண அறிவித்தல்

தோற்றம் 25 . 09 . 1938 — மறைவு 21 . 12 . 2024



**காசிப்பிள்ளை நடராசா**

(சிறுப்பிட்டி விஸ்னு துர்க்கா ஆலய தர்மகர்த்தா)

சிறுப்பிட்டி வடக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை நடராசா கடந்த (21.12.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற காசிப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், குகனேஸ்வரியின் அன்புக் கணவரும், சற்குணானந்தன் (ஆனந்தன்), ஜெயந்தினி (ஆசிரியை - சிறுப்பிட்டி அ.த.க. பாடசாலை), மாலினி (ஜேர்மன்), வரதராசன் (அவுஸ்திரேலியா), பிரபாகரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சரஸ்வதி (மருந்தாளர் - மந்திகை வைத்தியசாலை), சத்தியேந்திரா, இராகவன் (ஜேர்மன்), விஜிதா (அவுஸ்திரேலியா), டிலானி (கனடா) ஆகியோரின் மாமனாரும், பிரஜித், கஜீபனா, சினேகா, யுவேதா, யதுசன், மிதுசன், திரிஷிகா, அபி, சஞ்ஜய், லவன்சியா, றிஷ்மியா, தியன்சியா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2024) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மதியம் 12.00 மணியளவில் நீர்வேலி சீயக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சிறுப்பிட்டி வடக்கு,
நீர்வேலி.


(CR 43954) A-1

தகவல்: குடும்பத்தினர்
077 7917 836 (மகன்)
076 0065 934 (மகள்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 17 . 04 . 1935



மறைவு 22 . 12 . 2024

## செல்வி ஸ்ரெலா செல்வமணி செல்வதுரை

(Retired English Teacher Jaffna College Vaddukoddai)

சங்குவேலி உடுவிலை பிறப்பிடமாகவும் கல்லூரி வீதி வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி ஸ்ரெலா செல்வமணி செல்வதுரை நேற்று முன்தினம் (22.12.2024) ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் யோன் செல்வதுரை (இளைப்பாறிய ஆசிரியர் யாழ்ப்பாணக்கல்லூரி) -லூசில் தங்கரட்ணம் தம்பதிகளின் அன்பு மகளும் யோன் செல்வரட்ணம் (Retired Agriculture Research officer-Thirunelvely) ஏஞ்சலினா செல்வராணி மகாதேவன் (USA) எட்வேட் செல்வராஜன் செல்வதுரை (UK) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான ரஞ்சிதமலர், மகாதேவன் (USA) மற்றும் காந்திமதி (UK) ஆகியோரின் மைத்துனியும் அனோஜா, கலாநிதி நோயல் விமலேந்திரன், காலஞ்சென்ற அனுரா பமிலா, லலி-ரிம் (USA, விஜி-இயாங்கோ (USA), நிர்மலா-சாம் (USA) விமலன்-பெலின்டா (USA), பிரதீப்-அஸ்வினி (UK) ஆகியோரின் அன்புக்குரிய அன்ராவும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (24.12.2024) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று வட்டுக்கோட்டை தென்னிந்திய திருச்சபைக் கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**கலாநிதி நோயல் விமலேந்திரன்**
**இளைப்பாறிய யாழ்ப்பாணக்கல்லூரி அதிபர்**
**077 221 0173**


**கல்லூரி வீதி**
**வட்டுக்கோட்டை**

(CS 57008) V-1

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

அன்னை மடியில் 28 . 11 . 1944



அம்பாள் அடியில் 21 . 12 . 2024

## கந்தையா சிவநேசன்

**(ஹட்டன் ஹைலேண்ட்ஸ் கல்லூரி, பண்டாரவளை தமிழ் மகாவித்தியாலயம் (ஆசிரியர்) யாழ் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை. (ஓய்வுபெற்ற கனிஷ்ட பிரிவு அதிபர்)**

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம் மற்றும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிவநேசன் அவர்கள் கடந்த 21.12.2024 சனிக்கிழமை இறையடி எய்தியுள்ளார்.

அன்னார் அமரர்களாகிய கந்தையா - தையல்நாயகி தம்பதியரின் அன்பு மகனும், அமரர்களான RK. சுப்பிரமணியம் - பத்மாவதி தம்பதியரின் அன்பு மருமகனும், பத்மராணியின் பாசமிகு கணவரும், சிவதர்ஷினி (கனடா) சிவதாரணி (லண்டன்) பிரணவன் (IT Analyst HCL Lanka Pvt ltd) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சத்தியநாராயணா (கனடா), வரகுணன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், தியாகராஜா (சுவிஸ்), தனலஷ்சுமி, அமரர் மங்களராணி, இராசரத்தினம் (ஜேர்மனி), தயாபரன் (அவுஸ்திரேலியா), பராசக்தி (அவுஸ்திரேலியா), ராதா (அவுஸ்திரேலியா), இராஜசேகரன் (அவுஸ்திரேலியா), ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சரோஜினிதேவி (சுவிஸ்), இராஜவேல், யோகேஸ்வரன் (லண்டன்), சாந்தகுமாரி (ஜேர்மனி), சுலோஜனா (அவுஸ்திரேலியா), மகேஸ்வரன் (அவுஸ்திரேலியா), பரமேஸ்வரன் (அவுஸ்திரேலியா), ரஜனி (அவுஸ்திரேலியா), RKS அருள்மொழித்தேவன் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும், அனுசியா (பிரான்ஸ்) அவர்களின் சகலனும், அபிநவ் (கனடா) அவர்களின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.12.2024) புதன்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது **சுழிபுரம் திசமனை** இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : மனைவி, பிள்ளைகள்.**

சுகுமார் - 0094 77 814 9355, மதியழகன் - 0094 76 378 9392
சுதாகர் - 0094 77 241 7067, பிரணவன் - 0094 77 674 4125

(CS/57006) J-1

# மணமகள் தேவை

1. முல்லைத்தீவு, இந்து குருகுலம், 1994, அத்தம் MSc மணமகனுக்கு மணமகள் தேவை. - 47011
2. தெல்லிப்பளை - பருத்தித்துறை, இந்து, குருகுலம், 1996, சித்திரை, Post graduate in Managment , Newzeland மணமகனுக்கு மணமகள் தேவை. - 36133
3. அராலி இந்து குருகுலம் 1990, பூசம், BSc, Government Servant மணமகனுக்கு மணமகள் தேவை. - 31900
4. K.K.S - மாவிட்டபுரம், இந்து, கௌரவகுலம் (K), 1988, ரோகிணி, MSc, France மணமகனுக்கு மணமகள் தேவை. - 46157
5. சங்கானை, இந்து, கௌரவகுலம் (K), 1992, விசாகம், BA (Hons), Germany + UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. - 34210
6. சுன்னாகம், சாவகச்சேரி, இந்து, கௌரவகுலம் (K), 1996, மிருகசீரிடம், BSc Engineering, Australia மணமகனுக்கு மணமகள் தேவை. - 32933
7. யாழ்ப்பாணம், இந்து, விஸ்வகுலம், 1988, சுவாதி, Quantity Surveyor, UK மணமகனுக்கு மணமகள் தேவை. - 33913
8. நல்லூர், இந்து, விஸ்வகுலம், 1987, அத்தம், BA (Hons) FIPA, FFA, Australia மணமகனுக்கு மணமகள் தேவை. - 32042
9. வரணி - சாவகச்சேரி, இந்து, விஸ்வகுலம், 1988, மகம், BBA, ACCA மணமகனுக்கு மணமகள் தேவை. - 2991

எம்மிடம் எல்லா ஜாதியிலும், Unmarried, Divorce மணமகன்களும், மணமகள்களும் உண்டு.

(CS/57001) J-1

S.Sharma J.P, போன் - 077 539 3728
www.thaalee.com Whats app - 077 803 8193

## திருவாசக முற்றோதல்

யாழ்., டிசெ. 24

கீரிமலை ஸ்ரீ மகா முத்துமாரி அம்மன் ஆலயத்தில் நாளை புதன்கிழமை திருவாசகமுற்றோதல் இடம்பெறவுள்ளதாக ஆலய ஆதீனகர்த்தா சிவஸ்ரீ நவராஜ உமாபதீஸ்வர குருக்கள் அறிவித்துள்ளார். அன்றையதினம் மகேஸ்வர பூசையும் இடபெறவுள்ளதுடன் திருவாசக பாராயணம் செய்யும் சிறுவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-6)

# ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

வேலணை பிரதேச சபையின் புங்குடுதீவு உபஅலுவலகத்தின் நிர்வாக எல்லைக்குட்பட்ட திரு.பரநிருபசிங்கம் பத்மகுமார் அவர்கள் 06 ஆம் வட்டாரம், புங்குடுதீவு, வேலணை, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் வசிக்கின்றார்.

01 ஆம் வட்டாரம், புங்குடுதீவு, வேலணை, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள உறுதியின் பிரகாரம் வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் புங்குடுதீவு கோவிற்பற்று புங்குடுதீவு இறை "கிராஞ்சி" எனும் பெயருள்ள நிலப்பரப்பு 02 குளி 14.69 விஸ்தீரணமுள்ள இவ் ஆதனம் திரு.பரநிருபசிங்கம் பத்மகுமார் அவர்களினால் பிரசித்த நொத்தாரிசு திரு.யோகநாதன் சத்தியநாதன் அவர்களினால் எழுதப்பட்ட 3385 ஆம் இலக்க 2023.06.21 ஆம் திகதிய பிரகடனம் உறுதி மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

**ஆதன விபரம்**

நிலஅளவையாளர் திரு.C.விஸ்வநாதன் அவர்களினால் வரையப்பட்ட 1150 ஆம் இலக்க 2023.06.18 ஆம் திகதிய நிலஅளவைப்படத்தின் பிரகாரம் நிலப்பரப்பு 02 குளி 14.69 (724.20Sqm) விஸ்தீரணமுள்ள இவ்ஆதனத்தின் எல்லைகள் பின்வருமாறு..

கிழக்கு :- பசுபதிப்பிள்ளை வீதி.
வடக்கு :- கிராஞ்சி கந்தசுவாமி கோவிலுக்கு உரிய ஆதனம்.
மேற்கு :- சிவபாதசுந்தரம் சிவகுமார் மனைவி விஜிதாவிற்கு உரிய ஆதனம்.
தெற்கு :- யாழ்ப்பாணம் குறிகாட்டுவான் வீதி இதடங்கலும் இதைச் சேர்ந்தவைகளும்.

மேற்குறித்த ஆதனத்தை திரு.பரநிருபசிங்கம் பத்மகுமார் அவர்கள் பெயரில் ஆதன உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் உறவினர்கள் மூலமாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் மேற்குறித்த காலப் பகுதியினுள் ஆட்சேபனையை தெரிவிக்காத சந்தர்ப்பங்களில் விண்ணப்பதாரியின் பெயருக்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ளப்படுமென்பதையும் மேற்குறித்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதனால் எதிர்காலத்தில் வரக்கூடிய பிரச்சினைகளுக்கு வேலணை பிரதேச சபை எவ்விதத்திலும் பொறுப்பேற்காதென்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

செயலாளர்,
வேலணை பிரதேச சபை, வேலணை.

(CS/57002) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவர்கள் ஓய்வு வயது 63

## வர்த்தமானி வெளியீடு

கொழும்பு, டிசெ. 24
அனைத்து மருத்துவர்களின் கட்டாய ஓய்வு வயது 63 ஆக இருக்கவேண்டும் என விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

ஓய்வூதிய அரசமைப்பு திருத்தச் சட்டத்தின்படி, 2022 டிசெம்பர் 12 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் திருத்தப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. (ச-இ)

# நடைமுறைகளின் படியே ஜனாதிபதி நிதியத்தால் உதவி

## ரணில் தெரிவிப்பு



யாழ்ப்பாணம்,டிசெ.24
2022 முதல் செப்ரெம்பர் 2024 வரையிலான தனது பதவிக் காலத்தில், அரசியல்வாதிகளின் மருத்துவ உதவிக்கான அனைத்து தனியார் கோரிக்கைகளும் ஜனாதிபதி நிதியத்தின் நிலையான நிர்வாக நடைமுறைகளின் படியே கையாளப்பட்டதாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒருவரைத் தவிர, எவரும் ஒரு மில்லியன் ரூபாவுக்கும் அதிக மானநிதியுதவியைப் பெறவில்லை. இதில் நோயாளிகள், விண்ணப்பதாரர்கள் மற்றும் தீவிர சிகிச்சை தேவைப்படும் குழந்தைகளுக்கான உதவிகளும் அடங்கியுள்ளன - என்றார். (ச-இ)


### வலிகாமம் தெற்கு பிரதேசசபை - சுன்னாகம்
### ஏலவிற்பனை

எமது சபையின் சுன்னாகம் வாழைக்குலை சந்தையில் குவிக்கப்பட்ட கட்டட இடிபாடுகள் 07.01.2025ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன. ஏலதாரராக கலந்து கொள்வோர் அன்றைய தினம் 10.00 மணிக்கு முன்னர் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 100.00 செலுத்தி தங்களைப் பதிவுசெய்வதன் மூலம் ஏலத்தில் பங்குபற்ற முடியும். ஏலத்துக்குரிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை ஏலம் நடைபெறும் நேரத்தில் நேரத்தில் அவ்விடத்தில் அறியத்தரப்படும். சித்திபெற்ற ஏலதாரர் உரிய தொகையினை அன்றைய தினமே செலுத்தி பொருட்களை முழுமையாக அகற்றுதல் வேண்டும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

திருமதி சாரதா உருத்திரசம்பவன்
செயலாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை
சுன்னாகம். 24.12.2024.
(CR/43959) J-1


# விபத்தை ஏற்படுத்திவிட்டு தப்பியோடியவர்கள் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 24
மாணவி ஒருவர்மீது விபத்தை ஏற்படுத்திவிட்டுத் தப்பியோடிய இருவர் வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சங்கானைப் பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. மதுபோதையில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே மாணவியை மோதிக் காயப்படுத்திவிட்டு வட்டுக்கோட்டை ஊடாக காரைநகர் நோக்கிப் பயணித்துள்ளனர். இதன் போது அவர்கள் வட்டுக்கோட்டை இளைஞர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு, வட்டுக்கோட்டைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். வட்டுக்கோட்டைப் பொலிஸார் அவர்களைக் கைதுசெய்து மானிப்பாய் பொலிஸாரிடம் பாரப்படுத்தியுள்ளனர்.

மானிப்பாய் பொலிஸார் குறித்த இருவர் மீதும் வழக்குத் தாக்கல் செய்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். பாதிக்கப்பட்ட மாணவி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது. (மு-125)


### கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு
### 2025 ஆம் ஆண்டிற்கான புதிதாக அமைக்கப்பட்ட மத்திய பேருந்து நிலைய கடைக்கான (மக்கள் வங்கி அருகாமை) குத்தகை அடிப்படையில் வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் காணப்படும் மத்திய பேருந்து நிலையத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கடையினை 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 08ம் திகதி முதல் டிசம்பர் மாதம் 31ம் திகதி வரையிலான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி :- 24.12.2024 முற்பகல் 9.00 மணி தொடக்கம் 06.01.2025 பி.ப 02.00 மணி வரை (அலுவலக நாட்களில் மட்டும்)
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :- 07.01.2025 மு.ப 10.00 மணி வரை
கேள்விப்பத்திரம் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி :- 07.01.2025 மு.ப 10.30 மணி

| இல | பெயர் | கேள்விப்படிவக் கட்டணம் (VAT,NB) நீங்கலாக | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் ரூபா | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை (VAT,NB) நீங்கலாக |
|---|---|---|---|---|
| 1 | மத்திய பேருந்து நிலைய கடை(மக்கள் வங்கி அருகாமை) | 2,000.00 | 21,600.00 | 720,000.00 |

நிபந்தனைகள்:

1. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருப்பதுடன் கரைதுறைப்பற்று பிரதேச சபையின் எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராகவும் இருத்தல் வேண்டும்.
2. கேள்விப்பத்திரத்தினை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு. என்னும் முகவரிக்கு முத்திரை இட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் முல்லைத்தீவு மத்திய பேருந்து நிலைய கடைக்கான (மக்கள் வங்கி அருகாமை) கேள்வி என கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலம் 07.01.2025 முற்பகல் 10 மணிக்கு முன் கிடைக்கக் கூடியவாறு அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென கரைதுறைப்பற்று பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்பட வேண்டும்.கேள்வி நேரத்தின் பின்னர் கிடைக்கும் படிவங்கள் நிராகரிக்கப்படும்.
3. கேள்விப்பத்திரங்களை பெற விரும்புபவர்கள் கிராமசேவையாளரினால் வழங்கப்பட்ட வதிவிடச்சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டைப் பிரதியுடன் கரைதுறைப்பற்று பிரதேசசபையின் தலைமை அலுவலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.
4. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது. எனினும் தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அது நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் எதுவும் மீளளிக்கப்பட மாட்டாது.
5. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களிற்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்வி தொடர்பிலும் இறுதி முடிவெடுக்கவும் கேள்விச்சபைக்கே பூரண அதிகாரமுண்டு.
6. அதிகூடிய கேள்வித்தொகை கூறும் கேள்விதாரருக்கு சபையுடனான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் மீள் கேள்வி அறிவித்தல் செய்யப்படும். ஏற்றுக்கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்பு பணம் மீளளிக்கப்படமாட்டாது.
7. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் அறிவித்தல் செய்யப்பட்ட திகதியின் மறுநாள் (08.01.2025) பி.ப 2.30 மணிக்கு முன்னர் குறிப்பிட்ட கேள்வித் தொகையின் 1/3 பகுதியை (உரிய வரிகளுடன்) குத்தகை வைப்பாக செலுத்தி குத்தகை ஒப்பந்த உடன்படிக்கை பூர்த்தி செய்தல் வேண்டும்.
8. சபையின் அனுமதியின்றி எதுவித திருத்த வேலைகள்.மாற்றங்கள்.புணரமைப்பு வேலைகளும் மேற்கொள்ள முடியாது.
9. தங்களால் நடத்த உத்தேசிக்கப்படும் வியாபாரத்தின் தன்மை சபையால் பரிசீலிக்கப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்படும்.
10. மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளின் பிரகாரம் நடக்க தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டு செலுத்தப்பட்ட பணத்தொகைகள் மீளளிப்பு செய்யப்படமாட்டாது என்பதுடன் அவர்களது பெயர் தவறுநர் பட்டியலில் அட்டவணைப்படுத்தப்படும்.
11. சபையின் செயலாளரின் இந்த ஒப்பந்தம் தொடர்பாக எதுவித முடிவையும் ஏற்க வேண்டும். இது தொடர்பாக செயலாளருக்கு எதிராக நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்க முடியாது.
12. கேள்வி சம்பந்தமாக மேலதிக விபரங்களை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

செயலாளர்,
கரைதுறைப்பற்று பிரதேச சபை,முல்லைத்தீவு. 2024.12.23
(CR/43960) J-1


# உயிரைப் பறித்த 'செல்பி'

கொழும்பு, டிசெ.24
அநுராதபுரம் பொது விளையாட்டரங்கில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் பங்கேற்க வந்த மகளும் தாயும் செல்பி எடுக்கச் சென்றபோது ரயிலில் மோதி உயிரிழந்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடந்துள்ளது. 18 வயது மாணவியும், அவரது தாயான 37 வயதுப் பெண்ணுமே உயிரிழந்துள்ளனர். இரத்தினபுரி பிரதேசத்தில் இருந்து அநுராதபுரத்துக்கு வந்த இவர்கள், அநுராதபுரம் ரயில் நிலையத்துக்கு அருகில் காங்கேசன்துறையில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற அதிவேக ரயிலின் முன்பாக செல்பி எடுக்க முற்பட்டபோதே இந்த விபத்து நடந்துள்ளது. விபத்தில் சிக்கிய இருவரும் சம்வ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். (எ-இ)

# ஜனாதிபதி அலுவலகத்தின் விசேட கரோல் நிகழ்ச்சி!

கொழும்பு, டிசெ.24
ஜனாதிபதி அலுவலகம், முப்படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து வருடாந்தம் நடத்தும் நத்தார் விசேட கரோல் இசை நிகழ்ச்சி, தொழில் அமைச்சரும், பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான அனில் ஜயந்த பெர்னாண்டோ தலைமையில் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

நத்தார் கரோல் இசை நிகழ்ச்சியை முன்னிட்டு ஜனாதிபதி அலுவலக வளாகம் மற்றும் அதைச் சூழவுள்ள பகுதிகள் மின்னொளியால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரி...

றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பொது மருத்துவ நிபுணர்கள் முற்றாக இல்லாததால், இரண்டு பொதுமருத்துவ நிபுணர்கள் வாரத்தில் இரண்டு நாள்கள் தற்காலிகமான அடிப்படையில் சேவையாற்றி வருகின்றனர் என்றும், நிரந்தர மருத்துவர்கள் இல்லாததால் மருத்துவமனையின் வினைத்திறனான செயற்பாடுகளில் பெருமளவில் தொய்வுநிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், மருத்துவர்களும் அதீத வேலைப்பளுவில் பணியாற்றுகின்றனர் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மருத்துவர் பற்றாக்குறை காரணமாக, டெங்குத் தொற்று மற்றும் எலிக்காய்ச்சல் போன்ற பெருந்தொற்றுகள் ஏற்பட்டால் மருத்துவ நெருக்கடிகள் ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளதாகவும், மருத்துவர்களுக்கு இருக்கும் பற்றாக்குறை உடனடியாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும் என்றும் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன், சாவகச்சேரி மருத்துவமனையில் மருத்துவர்கள் இன்மையால், யாழ்ப்பாணம் போதனாவுக்கு வருகைதரும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது எனவும், கூடுதல் அழுத்தத்தின் கீழ் இயங்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு போதனா மருத்துவமனையும் தள்ளப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சாவகச்சேரி மருத்துவமனைக்கு எதிராக, அண்மைக்காலமாக முன்வைக்கப்பட்ட கண்மூடித்தனமான விமர்சனங்கள் காரணமாகவே, பல மருத்துவர்கள் அங்கிருந்து வெளியேறியுள்ளனர் என்றும், இன்னும் பலர் அங்கு சேவை செய்வதற்கு வருகைதரப் பின்னடிக்கின்றனர் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ-ம-26)

## மஹிந்த...

ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கத்தால் சடுதியாகக் குறைக்கப்பட்டுள்ளது. இதையடுத்தே, மஹிந்தவுக்கு இன்னமும் பல்வேறுபட்ட உயிரச்சுறுத்தல் உள்ளது என்றும், அவருடைய பாதுகாப்புக் குறைக்கப்பட்டமை தவறான நடவடிக்கை எனவும் பெரமுன கூறியுள்ளது.

இது தொடர்பில் பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தரும் சட்டத்தரணியுமான மனோஜ் கமகே தெரிவித்ததாவது:-

முன்னாள் ஜனாதிபதிக்குரிய இராணுவப் பாதுகாப்பு நேற்று முதல் (நேற்று முன்தினம்) நீக்கப்பட்டுள்ளது. புலிகள் அமைப்புக்கு முடிவுகட்டிய மஹிந்த ராஜபக்சவுக்குரிய இராணுவப் பாதுகாப்பு முழுமையாக நீக்கப்பட்டமையானது அவரின் உயிருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

முக்கியஸ்தர்களின் பாதுகாப்புத் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவானது மஹிந்த ராஜபக்சவுக்கு உள்ள பாதுகாப்பு அச்சுறுத்தல் தொடர்பில் அறிக்கையொன்றைக் கோரியிருந்தது. 5ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியான மஹிந்த ராஜபக்சவின் பாதுகாப்புப் பிரிவுக்குப் பொறுப்பாக உள்ள அதிகாரியால் மேற்படி குழுவுக்கு அறிக்கை அனுப்பிவைக்கப்பட்டது.

13 புலனாய்வு அறிக்கைகளை மேற்கோள்காட்டி மஹிந்த ராஜபக்சவுக்குள்ள பாதுகாப்பு அச்சுறுத்தல் பற்றியும், அவருக்கு ஏன் பாதுகாப்புக் குறைக்கப்படக்கூடாது என்பது பற்றியும் பாதுகாப்புப் பிரிவு பணிப்பாளரால், முக்கியஸ்தர்களின் பாதுகாப்புத் தொடர்பில் மறுபரிசீலனை செய்த குழுவுக்குத் தெளிவூட்டப்பட்டிருந்தது. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு, புலிகள் அமைப்பு மற்றும் பாதாளக் குழுக்கள் உள்ளிட்ட தரப்புகளால் மஹிந்த ராஜபக்சவுக்கு ஏற்பட்டிருந்த அச்சுறுத்தல் நீங்கவில்லை என்ற தெளிவான விளக்கம் வழங்கப்பட்டும், மஹிந்த ராஜபக்சவின் பாதுகாப்பு நீக்கப்பட்டுள்ளது. எனவே, மஹிந்த ராஜபக்சவுக்கு ஏதேனும் அச்சுறுத்தல் ஏற்பட்டால் அதற்கு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சும், அரசாங்கமுமே பொறுப்பேற்க வேண்டும். போருக்கு முடிவுகட்டி, படையினரின் சடலங்கள் கிராமங்களுக்கு வருவதை தடுத்த தலைவர்தான் மஹிந்த ராஜபக்ச. அவருக்கு ஆயிரம் பேரை பாதுகாப்புக்கு வழங்கினால்கூட அதில் தவறு இருக்காது - என்றார். (அ-ம-44)

## பாதுகாப்புக்...

ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது. முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புத் தொடர்பில் அரசாங்கம் என்ன முடிவு எடுத்தாலும் பிரதான எதிர்க்கட்சி என்ற வகையில் எமக்குப் பிரச்சினையில்லை. ஆனால், முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பைக் குறைப்பதால் பொருளாதாரம் மேம்படும் என்று கூறுவது போலிப் பரப்புரையாகும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதிகளுக்குப் பாதுகாப்பு வழங்கிய படையினரைக் குறைத்தால், அந்தப் படையினர் வீடுகளுக்குச் செல்லப்போவதில்லை. மாறாக முகாம்களுக்குத்தான் செல்லப் போகின்றனர். அவர்களுக்கு ஊதியம் வழங்கப்படத்தான் போகின்றது. இது எவ்வாறு நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தும்? என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார கேள்வி எழுப்பியுள்ளார்.

நாட்டின் பாதுகாப்புத் தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்கு பல நிறுவனங்கள் உள்ளன. அந்த நிறுவனங்களுடன் முறைப்படி கலந்தாலோசித்து தீர்மானத்தை எடுத்தால் நல்லது என்றும் நளின் பண்டார எம்.பி. மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம-44)

## நெஞ்சுவலி...

துள்ளார். குருணாகல் மாவட்டத்தைச் சேர்ந்த றதித்த ரங்கன திஸாநாயக்க (வயது-31) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

பலாலி இராணுவ மருத்துவமனையில் வைத்து நேற்றுமுன்தினம் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையிலேயே, சிகிச்சையின் போது நேற்று உயிரிழந்துள்ளார்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். மாரடைப்புக் காரணமாக மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்றுப் பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது. (அ-ம-26)

## மோ.சைக்கிளில்...

வாழைக் குலைகளைக் கொடுப்பதற்காகச் சென்றபோதே, அவர் திடீரென வீதியில் மயங்கி வீழ்ந்துள்ளார். உடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குஅவரைக்கொண்டு சென்றபோது, அந்த நபர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று மருத்துவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். இதய வால்வுச் சுருக்கம் காரணமாக மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-ம-26)

## மின்கட்டணத்தைக்...

அரசாங்கமும் மின்சாரசபையும் இணைந்து செயற்பட்டு மக்களுக்கு கிடைத்திருக்க வேண்டிய நிவாரணத்தைத் தடுத்துள்ளன. மின்கட்டணத்தைக் குறைக்க வேண்டாம் என்று அரசாங்கமே மின்சாரசபைக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளதாக அறியக் கிடைக்கின்றது. மின் கட்டணத்தை உடனடியாகக் குறைப்பதாகக் கூறி ஆட்சிக்கு வந்தவர்கள் இன்று மக்களைத் துன்பப்படுத்தும் நடவடிக்கைகளில் தீவிரம் காட்டுகின்றனர் - என்றார். (அ-ம-இ)

## உள்ளூராட்சித்...

உறுமயவின் தலைவர் கம்மன்பில நேற்று மேலும் தெரிவித்ததாவது:-

உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச்சட்டமூலம் தொடர்பான நீதிமன்ற நடவடிக்கை, நாடாளுமன்ற அனுமதி மற்றும் வேட்புமனு கோரல் உள்ளிட்ட நடவடிக்கைகள் முடிவடைந்த பிறகு ஏப்ரல்மாதம்5ஆம்திகதியளவிலேயே தேர்தலை நடத்தக்கூடியதாக இருக்கும். ஏப்ரல் 5 ஆம் திகதிக்கு முன்னர் தேர்தலை நடத்துவதற்குரிய சாத்தியமே இல்லை. தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் தேர்தல் நடத்தப்படும் என ஜனாதிபதி கூறினாலும், காலப்பகுதியை நிர்ணயிக்கும்போது அரசாங்கத்தின் தரப்பில் சாதாரணதரப் பரீட்சையைக் கவனத்தில் எடுக்கவில்லைபோல் தெரிகின்றது.

மார்ச் 15ஆம் திகதி சாதாரணதரப் பரீட்சை ஆரம்பமாகின்றது. ஏப்ரல் 5ஆம் திகதிவரை அந்தப் பரீட்சை நடைபெறும். இந்த நிலையில் தேர்தல் நடத்தப்பட்டால் பரீட்சைக்கு மத்தியிலேயே தேர்தலும் இடம்பெறும். இது தேவையற்ற பிரச்சினையை ஏற்படுத்தக்கூடும். எனவே, சாதாரணதரப் பரீட்சையை தேர்தலுக்கு மத்தியில் நடத்த வேண்டாம்.

சூறாவளி எச்சரிக்கையால் உயர்தரப் பரீட்சையை பிற்போடுமாறு கோரப்பட்டிருந்தது. எனினும், கல்வி அமைச்சரான பிரதமர், பரீட்சை ஒத்திவைக்கப்படமாட்டாது என அறிவித்தார். இறுதியில் பரீட்சை நடத்தப்பட்டது. புயலும் வந்தது. பரீட்சையை தற்காலிகமாக ஒத்திவைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. சாதாரணதரப் பரீட்சைக்கும் இந்த நிலைமை ஏற்பட்டுவிடக்கூடாது - என்றார். (அ-ம-44)

## எலிக்காய்ச்சல்...

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் கரவெட்டி, பருத்தித்துறை, சாவகச்சேரி பகுதிகளில் எலிக்காய்ச்சல் தீவிரமாகப் பரவியிருந்தது. ஒவ்வொரு நாளும் அண்ணளவாக ஐந்துக்கும் மேற்பட்டவர்கள் இந்தத் தொற்றால் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டு வந்த நிலையிலேயே, தொற்று தற்போது ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

எலிக்காய்ச்சல் பரவல் உள்ள இடங்களில் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருந்தன. அத்துடன், விழிப்புணர்வு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இதன் விளைவாகவே, தொற்று தற்போது கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் மேலும் தெரிவித்துள்ளார்.

எலிக்காய்ச்சல் காரணமாக 8 பேர் உயிரிழந்துள்ளனர். அவர்களில் ஏழு பேர் யாழ்ப்பாணத்தையும், ஒருவர் முல்லைத்தீவையும் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-100)

## இலங்கையிடமிருந்து...

வின் செயற்குழுக் கூட்டம் முதலமைச்சர் ஸ்டாலின் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. இதன்போதே, கச்சதீவை மீட்க வேண்டும் என்றும், இலங்கைச் சிறைகளில் உள்ள தமிழக மீனவர்களை விடுவிக்க வேண்டும் எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இலங்கையின் ஜனாதிபதி அநுர அண்மையில் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். இதன்போது, தமிழக மீனவர்களின் விடயத்தை மனிதாபிமானத்துடன் அணுகுவதற்கு ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. இதை ஒரு சிறந்த ஆரம்பமாக தி.மு.க.வின் செயற்குழு கருதுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கை ஜனாதிபதிக்கும், இந்தியப் பிரதமருக்கும் இடையிலான பேச்சுவார்த்தையை அடுத்த கட்டத்துக்கு நகர்த்துவதற்கு ஏதுவாக இலங்கைச் சிறைகளில் உள்ள மீனவர்களை இலங்கை அரசாங்கம் விடுவிக்க வேண்டும். இதன்மூலம் ஒரு நல்ல சமிக்ஞையை இலங்கை அரசாங்கம் காட்ட வேண்டும் என்றும் தி.மு.க.வின் செயற்குழு வலியுறுத்தியுள்ளது. (அ-ம-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத மின்வேலிகளால் 50 யானைகள் உயிரிழப்பு!

கொழும்பு, டிச.24

இந்த ஆண்டின் இதுவரையான காலப் பகுதியில் 50 காட்டு யானைகள் சட்டவிரோத மின் இணைப்புகள் தாக்கி உயிரிழந்துள்ளன என்று மின்சாரசபையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனுமதியின்றி மின்சாரம் எடுப்பதைத் தடுக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும், அதற்கு பொது மக்களின் ஆதரவு எதிர்பார்க்கப்படுகின்றது என்றும் மின்சாரசபையின் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஏ-இ)

**வேலையாட்கள் தேவை**

- உள்ளூர் வாகனம் செலுத்துவதற்கு சாரதி (Driver) தேவை.
- கணக்காளர் தேவை.

தொடர்புகளுக்கு:
**021 430 3354**

**பணியாளர் தேவை**

புடைவை வியாபாரத்தில் நன்கு அனுபவமுள்ள மற்றும் பழகவிரும்பும் பெண் பணியாளர்கள் தேவை.

**077 580 4770**

(CR/43958) J-1

**காணி வீடு விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் 3 பரப்புக் காணியுடனான வீடு விற்பனைக்கு உண்டு.
விலை பேசித் தீர்மானிக்கப்படும்.
(தரகர் தொடர்புகொள்ள வேண்டாம்.)

தொடர்புக்கு:- **077 614 6434**

(CS/56903) J-1

பிரத்தியேக வகுப்புகள்

# ஆசிரியர்களுக்கான தடை ஒரே நாளில் புஸ்வாணம்!

## திரும்பப் பெற்றார் ஆளுநர் மேல் மாகாணத்தில் சம்பவம்

கொழும்பு, டிசெ. 24

மேல்மாகாணத்தில் உள்ள பாடசாலை ஆசிரியர்கள் தாம் கடமையாற்றும் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு பிரத்தியேக வகுப்புகளை நடத்துவதற்கு தடைவிதித்து நேற்றுமுன்தினம் சுற்றறிக்கை வெளியிடப்பட்ட நிலையில், அந்தச் சுற்றறிக்கை நேற்று ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

மேல்மாகாண கல்விச் செயலாளர் கே.ஏ.டி.ஆர். நிஷாந்தி ஜயசிங்க கையொப்பமிட்ட இந்த சுற்றறிக்கை கல்விப் பணிப்பாளர், பிராந்திய பணிப்பாளர்கள், பிரதேச கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் மாகாணத்திலுள்ள அனைத்து பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருந்த நிலையில், மேல் மாகாண ஆளுநரால் அந்தச் சுற்றறிக்கை நேற்று இடைநிறுத்தப்பட்டுள்ளது. (ம-இ)

# மூன்றாவது காலாண்டில் பொருளாதாரம் வளர்ச்சி

கொழும்பு, டிசெ. 24

2024ஆம் ஆண்டின் மூன்றாவது காலாண்டில் இலங்கையின் பொருளாதாரம் 5.5 வீதமான வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திவால் நிலையில் இருந்தும், தீவிரமான பொருளாதார நெருக்கடியில் இருந்தும் இலங்கை படிப்படியாக மீண்டு வருகின்றது.

இந்த நிலையிலேயே, இந்த வருடத்தில் மூன்றாம் காலாண்டில், அதாவது ஜூலை மாதம் தொடக்கம் செப்ரெம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் இலங்கையின் பொருளாதாரம் 5.5 வீதமான வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

ஆண்டின் இறுதிக் காலாண்டிலும் இந்த வளர்ச்சி வீதம் பேணப்பட வாய்ப்புக்கள் உள்ளதாக பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ம-இ)

# 31ம் நாள் நினைவஞ்சலி

## சங்கரப்பிள்ளை கைலாசபிள்ளை (நவம்)

உரிமையாளர் - நியூ கமல் செரமிக்ஸ், ஞானம் ஹோட்டல்)



தோற்றம்
31.07.1950

மறைவு
24.11.2024

ஈரவிழிகளுடன் எம் இதயத்தெய்வத்தை
எண்ணிப் பார்க்கின்றோம்
இதயங்கள் கனக்கின்றன
எழுத முடியவில்லை
நெஞ்சின் துயரச் சுவடுகளும்
கண்களின் உதிரிப் பூக்களும்
உங்கள் பாதக் கமலங்களை அர்ச்சிக்கின்றன
எங்கள் பாதங்கள் பூமியில் ஈரத்தோடு பதிகின்றன
தாயாய் தந்தையாய் எமை வளர்த்து
கல்விக் கண் திறக்க வைத்து
எங்கள் வாழ்வை மலரச் செய்தீர்கள்
உங்கள் உதிரம் சிந்தி உழைத்தவற்றை
எமக்கு ஆதாரமாகத் தந்து ஆறுதலடைந்தீர்கள்
செத்தும் கொடுத்த சீதக்காதிபோல்
வாரி வழங்கினீர்கள்
நீங்கள் என்றும் எங்கள் இதயங்களில்
வாழ்ந்து கொண்டிருக்கின்றீர்கள்

குடும்பத்தினர்

(CS/57005) J-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.12.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.